ஞானசம்பந்தம்

மலர் 10.] விக்ருதிஷு தைமீ 10—2—51. [இதழ் 3

திருக்கடவூர் தேவஸ்தானம் பிரசார சபாமண்டபத்தில்

திருமுறைவகுப்பு ஆண்டுவிழா - திருமுறை மாநாடு.

தலைவர்:— ரஸிகமணி, டி. கே. சி. அவர்கள்.

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.

உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீனம்

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

மாதந்தோறும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திரத் திருநாளன்று சிவஸ்தலங்களில் அபிஷேக ஆராதனை செய்துவருதல்போல இம்மாதத்திலும் 28—1—51 அன்று மேலைத் திருக்காட்டுப் பள்ளி என்னும் சிவத்தலத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, பதிகங்களை ஓதுவித்து, ஆராதனை முடிவில் "மேலைத் திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகங்கள்" என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

தருமையில் கும்பாபிஷேகம்

தருமபுர ஆதீனம் திருமஞ்சனவீதியில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ சச்சிதானந்த விநாயகப்பெருமான் ஆலயம் பழுதுற்று இருந்ததைத் திருத்தி ஜீர்ணோத்தாரணத் திருப்பணி செய்விக்கப் பெற்று, 22—1—51 சோமவாரத்தில் மகாகும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது. மாலை விசேஷ வழிபாடுகள் நடந்தன. ஆதீனப் பாடசாலை மாணவர்கள் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினார்கள். இரவு திரு வீதிஉலாக்காட்சியும் நடந்தேறியது.

சென்னையில் ஸ்ரீ ஹரதத்தர் மகோற்சவம்

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை; சிவத்துக்குமேல் தெய்வம் இல்லை என்று நிரூபித்துக்காட்டிய ஸ்ரீ ஹரதத்தர் மகோற்சவம், புரசபாக்கம் ஸ்ரீ பங்கஜாம்பாள் சமேத ஸ்ரீ கங்காதரேசுவரர் ஆலயத்தில், ஸ்ரீ ஹரதத்தர் பக்த ஜன சபையின் சார்பில் 31—1—51 முதல் 11—2—51 வரை நடைபெற்றுவருகின்றது. லக்ஷார்ச்சனை வைபவமும் சிறப்பாக நடைபெறுகின்றது. சென்ற மார்கழிமாதம் 'ஞான சம்பந்தம்' இதழின் முகப்புப்படமாக விளங்கிய ஸ்ரீ ஹரதத்தர் பூஜைசெய்வதும், பெருமான் அருள்பாலிப்பதுமாகிய காட்சித் திரு உருவம் அச்சபையாரால் வெளியிடப்பெற்றதே. அப்படம் மிகப் பெரிய அளவில் பலவகை நிறங்களோடு கண்ணும் மனமும் ஒருங்கே பற்றக்கூடிய நிலையில் அவர்கள் தயார்செய்து, வேண்டுவோர்களுக்குக் கொடுத்துதவுகின்றார்கள். அன்பர்களின் ஒவ்வொரு இல்லங்கள் தோறும் இருந்து பூசனைபெறும் தகுதி உடையது. வேண்டுவோர் விலை விபரம் "காரியாலயம் 7, முருகேசமுதலியார்ரோடு, தியாகராய நகர், சென்னை." என்ற விலாசத்திற்கு ரிப்ளைகார்டு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

உ
குருபாதம

ஞானசம்பந்தம்

மலர் 10] விக்ருதிஞூ தைமீ 10—2—51. [இதழ் 3

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய பிஞ்ஞகா பிறபபிலீ
கொன்றையம் முடியிஞய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சமபந்தர்.

கனம் ராஜாஜி அவர்களின்
பொன்மொழி

நமது மாட்சிமைதங்கிய உள்நாட்டுமந்திரி ஸ்ரீ ராம் ராஜகோபாலாசாரியார் அவர்கள் கலைகோயில் திறப்பு விழாவிற்குத் திருவையாற்றிற்கு வந்திருந்தார்கள். அருமையான கருத்தொன்றை வெளியிட்டார்கள். அது, மககளுககுக் கடவுள் நம்பிககை குறைந்துவிட்டது; அதஞல் மழை இல்லை; எங்கும பஞ்சம் என்பது.

ஆம்! இதில் உண்மை இருககிறது. இப்போதுள்ள மககள் விஞ்ஞானகாலத்தவர்கள். அருளைக்காட்டிலும் அறிவிற்கு மதிப்புககொடுக்கிறவர்கள். எல்லாம் மனிதஞலேயே நடந்துவிடும என்ற நமபிக்கை உண்டாகி விட்டது. பனிககட்டியைத்தூவி மழையை வரவழைத்து

விடலாம் என்கிறான்; சேர்க்கை உரங்களைக் கொடுத்து ஒன்றை ஆயிரமாக விளைவித்துவிடலாமா என்று எதிர் பார்க்கிறான்; விலங்குகளின் மூளையை எடுத்து வைத்தியம் செய்து, கிழவனைக் குமரனாக்கலாம் என்கிறான்; கேட்டவுடனே மக்களுக்கு எல்லாவற்றையும் சுலபமாக மனிதனால் இயற்றிவிடமுடியுமே; கடவுள் துணைதான் எதற்குக்கு என்று எண்ணம் ஏற்படுகிறது.

ஊன்றிநோக்குங்கள்! ஐநூறுபவுன் செலவழித்து ஓரங்குலம் செயற்கைமழை பெய்ததாகச் செய்தித்தாள்கள் கூடச் சொல்லிற்று. அதுவும் எங்குமில்லை; குறிப்பிட்ட ஓரிடத்தில். கோடி செலவுசெய்து, குண்டுமணி கண்டுபிடித்த கதையல்லவா இது? இதைக்காட்டிலும் காலணா செலவில்லாமல் கனிந்தஉள்ளத்தோடு கடவுளை நம்பி ஒழுக்கமும் ஒற்றுமையுமில்லவ வாழ்ந்தோமானால்-தன்னலமும் ஏமாற்று வித்தையும் இல்லாமல் வாழ்ந்தோமானால் மழை தானாகப்பெய்யும்.

கடந்த நூற்றாண்டுகளுக்குமுன் மழைஇன்றி மக்கள் மடிந்தார்களா? வரலாறுண்டா? இன்றைக்கு மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் உணவு போதாமலிருக்கலாம். மழை இல்லாமைக்கு மக்கள்எண்ணிக்கை காரணமல்ல. மக்களுடைய மனமாற்றந்தான் காரணம். எந்தவழியிலும் கடவுளிடத்து அன்போ அச்சமோ இருந்தால் மனிதன் செம்மைப்படுகிறான். அதனால் எல்லாம் செம்மைப்படுகிறது. செம்மை செழிப்பை உண்டாக்குகின்றது. ஆதலால் மழையில்லாமைக்கும் மக்களிடம் கடவுள் பற்று இல்லாமையே காரணம் என்ற ராஜாஜி அவர்களின் பேச்சு, பொன்மொழிகளுள் ஒன்று. அதனை நாங்கள் மனமார வரவேற்கிறோம்.

திருக்கடவூர்

ஆண்டுவிழாவும் - மாநாடும்

ஆண்டுக்கொருமுறை கொண்டாடப்பெறும் ஆண்டு விழா, திருக்கடவூர் தேவஸ்தானத் தேவார வகுப்புக்கு 2—1—51ல் நடைபெற்றது. திருமுறைவகுப்பில் திருமுறை விழாவும் சேர்ந்துகொண்டால் கேட்கவா வேண்டும். அதிலும் நமது ரசிகமணி அவர்களின் தலைமையில் நடைபெற்றதென்றால் ஊர் வாசிகளுக்கு ஓர் அரிய விருந்துதானே. எதிர்பாராத அதிர்ஷ்டந்தானே. ஊரெங்கும் சிவமணம். திருமுறைமணம், தமிழ் மணம். இரவு சந்தனக்காப்பலங்கார விசேஷ வழிபாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நடுப்பகல் 3-மணி. சமயாசாரிய சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனை நடந்தது. பன்னிருதிருமுறை ஏடுகள் பட்டாடைகளாலும், திருவாபரணங்களாலும், மலர்மாலைகளாலும் அலங்காரஞ் செய்யப்பெற்று அருச்சிக்கப்பெற்றன. அங்கிருந்து நூற்றுக்கால் மண்டபமாகிய சமயப்பிரசார மண்டபத்திற்குத் திருமுறைகளை எழுந்தருளச் செய்துகொண்டு வந்து, வெள்ளி விமானத்தில் வைக்கப்பெற்றது. கடவுள் வணக்கத்துடன் திருவாரூர் இராஜன் கட்டளை கட்டளை சுவாமிகள் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சீரிய தலைமையில் மாநாடு தொடங்கிற்று. குறிப்பிட்டபடி ஆதீனஅடியார் பெருமக்கள், ஆதீனக்கல்விநிலைய ஆசிரியர்கள் ஆகியோர் பன்னிரு திருமுறைகளிலுள்ள அரிய பெரிய விஷயங்களை மிகச் சுருக்கமாகப் பேசினார்கள். 5-மணிக்கெல்லாம் யானைமீது திருமுறை ஊர்வலம் புறப்பட்டது. ஆதீன தேவஸ்தான தேவார வகுப்பு ஆசிரியர்கள், உள்ளூர் தேவஸ்தானவகுப்பு ஆசிரியர் மாணவர்கள், பிச்சக்கட்டளை தேவாரப்பாடசாலை ஆசிரியர் மாணவர்கள், ஆதீனப்பாடசாலை ஆசிரியர் மாணவர்கள் அனைவரும் பன்னிரு திருமுறைகளையும் முறையே தக்கபக்கவாத்தியங்களின் துணைகொண்டு ஓதிச்சென்றனர். மணி 7. ஊர்வலம் மீண்டும் வலமாகப் பிரசார மண்டபத்தை அடைந்தது.

மணி 7¼க்கு ஆண்டுவிழாத் தொடக்கம். வகுப்பு மாணவ மாணவிகள் திருமுறை ஓதினர். விழாத்தலைவர் ரஸிகமணி அவர்கள், சொற்பொழிவாளர் ராய. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆகியோர்கள் அவ

ரவர்களுக்கென அமைக்கப்பெற்ற ஆஸனத்தில் அமர்ந்தார்கள். ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரைகூற விழாத் தொடக்கமாயிற்று.

அன்பர்களின் அன்பு வெள்ளப்பெருக்கிலே வையை ஏட்டிலே அன்று தவழ்ந்த தமிழ் தவழ்ந்தது. ரஸிகமணியின் தமிழ் ரஸிகத்தமிழ்தானே. அத்தமிழுக்குத் தனிரஸம் உண்டு; பாவம் உண்டு என்று யார்தான் தெரியாமல் இருப்பார்கள். அத்தமிழைப்பாருங்கள். அமெரிக்க பாதிரியார் ஒருவர் ரஸிகமணியிடம் சென்று 'திருக்குற்றாலம் தமிழ்ப்பண்பாட்டுக்கு என்ன துணைசெய்யும்' என்று கேட்டாராம். கேள்வியில் வியப்பில்லை. விடையில் வியப்பிருக்கின்றது. 'திருக்குற்றாலநாதர் கோயிலும், அங்கு நடக்கும் வழிபாடும், தமிழ்ப்பாடல்களும் துணைசெய்யும்'. இதுதான் ரஸிகமணி அவர்களின் விடை. தமிழ்ப் பாடல்களில் ஒன்றும் சொல்லிக்காட்டுகிறார் எப்படிச்சொல்லுகிறார்? பலதடவைசொல்கிறார். திரும்பத்திரும்ப சொல்கிறாரே. ஏன் என்று கேட்கலாம்? ஒவ்வொரு தடவையிலும் அத்தமிழ்ப் பாடல் தனித் தனி மெருகுடன் காணப்படும். கேட்பவர்கள் பாடலின் தலைப்பைக் குறித்துக்கொண்டு வீடு சென்று பாட்டகராதித் துணைகொண்டு தேடி எடுத்துப் படிக்கவேண்டாம். கேட்டபொழுதே பசுமரத்தாணிதான். என்ன சொல்கிறார். நமக்குத்தெரிந்த பாட்டுதான். அதுமட்டுமல்ல! பல தடவையும் படித்து மனப்பாடம் செய்திருக்கிறோம். பலர் சொல்லவும் கேட்டிருக்கிறோம். ஆனாலும் ரஸிகமணி சொல்லும் பொழுது அப்பாட்டு தனி அழகு பெறுகிறது. "வாயும் நாக்கும் என்ன சொல்கின்றன; நாங்கள் இருக்கிறோம் கற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு ஏன்கவலை என்று. பூக்கள் என்னசொல்லுகின்றன? நாங்கள் தயாராகஇருக்கிறோம். எடுத்து இட்டுக்கொள்ளலாமே என்கின்றதாம். பார்த்தது பக்கத்திலே உள்ள நீர். அது என்ன சொல்கிறது. அதே பாடத்தைப் படிக்கிறது. என்ன? அபிஷேகிப்பதற்கு எங்களை இட்டுக்கொள்ளலாமே என்று. ஆகவே வாய் உண்டு; நாவுண்டு; பூ உண்டு; நீர் உண்டு. இனிக் கவனிப்போம். 'கற்றைச்செஞ்சடையான் உளன் நாம் உளோம்' இட்டுக்கொள்ளப் பெருமான் தயாராக இருக்கின்றான். நாம் இடத் தயாராகி விடுவோம். இட்டால் என்னபயன்? அதுதான் சிறந்த பகுதி. இறைவன் எங்குமாய் வியாபியாய் இருக்கும் பொழுது எமன் எங்கு இருக்கமுடியும்? ஆகவே எமனும் கிடையாது. நாமும் அவனால் கோபிக்கப்படமாட்டோம்

என்கிறார். யார்? நமது அப்பரடிகள். உழவாரப்படையாளி. என்ன தமிழ்; என்ன இனிமை; என்ன அற்புதம்;

கூற்றுக் கொள்வன வாயுள நாவுள;
இட்டுக் கொள்வன பூவுள நீருள;
கற்றைச் செஞ்சடையான் உளன்; நாம் உளோம்;
எற்றுக்கோ நமனால் முனி வுணபதே.

இது போன்ற பல தமிழ்ப்பாடல்கள் நமது மகாசந்நிதானமவர்கள் காலையில் சொன்னார்கள். கேட்டேன். மூவர்கள் அருளிய தேவாரமே நமசெல்வம. அதைவிடச் சிறந்த செல்வம வேறு கிடையாது' என்று அவர்கள் சொன்ன போது எனக்கு மிக இன்பமாக இருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் தமது பலதேவாலயங்களில் இதுபோன்ற தேவார வகுப்பு நடத்தி வருவதை அறிய பெரும மகிழ்ச்சி. அது மட்டுமல்ல; வானொலியில் சிறந்த ஓதுவாமூர்த்திகளை, அடியார் பெருமக்களை அனுப்பி ஊரெங்கும திருமுறை முழங்கச் செய்கின்றார்கள். இப்படிச்செய்வதால எங்கும தமிழ்மணக்கும. தெய்வம் மணக்கும; அன்று கூடலமபதியில் கிளிகள் ஆங்காங்கு பூசை புரிகின்ற அடியார்கள் சொல்லும் திருமுறைகளைக்கேட்டுக் கேள்விஞானத்தால சொல்லிற்றும.

ஆடல்புரிந்தான் அரன்என்றும் மூவர் தமிழ்ப்
பாடல உகந்தான் பரன்என்றும் - கூடலிலே
நன்னரி வாசிக்கு நடைபயிற்றினான் என்றும்
கின்னரி வாசிக்கும் கிளி.

இது போன்ற இனிமை வேறு எந்தப்பாஷைக்கும் கிடையாது. இத்தகைய நிலை இவர்கள செய்யும் பிரசாரத்தால் வந்தே தீரும என்று தம முன்னுரையில் குறிப்பிட்டுப பேசியதோடு குகை நமசிவாய தேவர் அருளிய 'நாவிருக்கப் பாவிருக்க நல்ல திருநீறிருக்க' என்றபாடலையும எடுத்து நன்றாக விளக்கிக் காட்டினார்கள்.

அடுத்தபடி உயாதிரு, ராய சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின சொற்பொழிவு. திரு செட்டியார் அவர்கள் ரஸிக மணி அவாகளுடன் நெருங்கிப்பழகித் தமிழ்ப்பண்பாட்டை-அதன் இனிமையை நன்கு அறிநது அநுபவித்தவர்களல்லவா? எப்படி டி. கே. சி. என்ற உடன் தமிழ்மக்களுக்கு ஒரு புது உணாச்சி ஏற்படுகிறதோ அப்படித்தான் ராய. சொ. என்பதும். அதுமட்டுமல்ல, சிறப்பாகச செட்டிநாடு வட்டாரத்தில் - ஏன்

பொதுவாக எங்குமே திருமுறைமணம் வீசுகின்றது என்றால் அதற்கு, சிறுவெளியீடு முதலாகப் பெரியவெளியீடுகள்வரை எல்லாம் திருமுறைப்பாடல்களாகவே வெளியிட்டு உதவிவரும் அவர்கள் பணியும் ஒருகாரணமல்லவா? ஆகவே அவர்கள்பேச்சு சிறப்புச் சொற்பொழிவுதான். அங்குக் கூடியிருந்த அவ்வளவு மக்களையும் - சற்று முன்னால் பன்னிரு திருமுறைகளைப் பற்றிப் பேசிய அனைவரையும் சிறிது நேரத்திற்குள் பன்னிரு திருமுறை களிலும் திளைக்கச் செய்துவிட்டது. பன்னிரு திருமுறைகளையும் அரைமணி நேரத்திற்குள் ஒருவரே எப்படிப்பேசமுடியும் என்று நினைக்கும் அன்பர்கள்கூட செட்டியார் அவர்கள் பேச்சைக் கேட்டவுடன் நினைப்பொழிந்தார்கள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு திருப்பாடல். அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரிந்தார்கள். அனைவரும் வண்டுகளாகிமாந்திமெய்மறந்தனர்.

பின்னர் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருவுள்ளப் பாங்கின்படி ரசிகமணி அவர்கள் தேவாரவகுப்பு மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கியருளி மாணவர்களின் பயிற்சித் திறனைப் பாராட்டித் தம்முடிப்புரையை முடித்துக்கொண்டார் கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தம் ஆசியுரையில் 'மீனவன் செவியினூடு மெய்யுணர்வளிப்போர் கூற, ஞான சம்பந்தர் என்னும் நாம மந்திரமும் செல்ல, ஆனபோதயர்வு தன்னை அகன்றிட' என்ற சேக்கிழார் பெருமானின் திருப் பாடல் பகுதிகொண்டு ஞானசம்பந்தத்தின் பெருமையை நன்கு விளக்கியருளி அனைவரையும் ஆசீர்வதித்தார்கள்.

இறைவணக்கத்தின்பின் திருமுறைகளை நால்வர் சந்நிதிக்கு எழுந்தருளச்செய்து தீபாராதனை நடத்தப்பெற்றது.

மணி9½. யாவரும் அமுதகடேசப்பெருமான் வழிபாட்டை முடித்துக்கொண்டு அபிராமி சந்நிதியை அடைந்தார்கள். நவசக்தி அர்ச்சனை தொடங்கப்பெற்றது. மாணவமாணவிகள் அபிராமி அந்தாதி பாடல்முழுவதையும் இசையுடன் பாராயணஞ் செய்தார்கள். 'ஔசை ஒலிஎலாம் ஆனாய் நீயே' என்று ஆசாரிய மூர்த்திகள் சொல்லிவைத்தது உண்மைதான் என்று உணர்ந்தார் கள் வழிபடவந்த அனைவர்களும். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத செல்வியல்லவா அன்னை அபிராமி. 10½மணிக்கு அர்ச் சனையும் நிறைவுற்றது. பாராயணமும் அப்படியே. அலங்கார தீபாராதனைக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அன்பர் களுக்கு அன்னையின் அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

ஐந்தொழில்

[வித்துவான், திரு. க. சம்பந்தனார், கடலூர்.]

3. அழித்தல்

ஐந்தொழிலில் அழித்தல் மூன்றாவதாகும். உலகில் ஒன்றன் அழிவு ஒன்றுக்கு ஆக்கமாகவும் காணப் படுகிறது. களையெடுப்பது பயிரின் ஆக்கத்திற்கு. உட்பகை, வெளிப்பகை இரண்டினையும் அரசன் ஒழிக்க முயல்வது தனது நாடு சுகமாகவாழ. மனிதன் பொய், குறளை, வன்சொல், பொறாமை, கோபம், காமம், அச்சம், மதம், உலோபம் முதலியவைகளை ஒழிப்பது அல்லது ஒழிக்கவேண்டும் என்று சொல்வது எற்றுக்கு? மனிதன் மனிதனாக வாழ. அன்றியும் இதிகாசங்கள் புராணங்கள் இவைகளின் முடிவில் அழித்தல் தொழில் கூறப்படுவதை நாமறியலாம். அழிவு என்பது ஒன்று இருந்தால்தான் மறுமலர்ச்சி உண்டாகும்; அதனால் உலகம் முன்னிலும் நன்முறையில் நடைபெறும். விரைவில் குறித்த இன்ப நிலையையும் அடைய முடியும். உலகிற்கு முப்பாலருளிய வித்தகர் திருவள்ளுவர், ஜீவகாருண்யம் போதித்த புத்தர், துன்புறாமலும் துன்புறுத்தாமலும் துன்பம் பொறுத்தும் வாழவேண்டு மென்ற ஏசு, நபி முதலியோரெல்லாம் இன்று எங்கே? இன்றிருந்த உத்தமர் - உள்ளத்தால் பொய்யா தொழு கியவர் - உலகத்தார் உள்ளத்துளெல்லாம உள்ளவர் காந்திமகான்தான் எங்கே? காந்திஜீயின் இறப்பைக் குறித்து, "உலகத்தில் அளவிற்கு மேலாக நற்குண முடையவர் இருக்கக்கூடாதுபோலிருக்கிறது" என்று எவ்வளவு நுட்பமாக அறிஞர் பெர்னட்ஷாவும் கூறி யிருக்கிறார். இவற்றால் அழிப்புமுறை எவ்வளவு அவசி யத்துடன் நடக்கிறது என்பதை நாம் உணர்தல் வேண்டும். அந்த அழிப்பினால் புத்துணர்ச்சியும், புது

இயக்கமும், புது உலகமும், புது வாழ்வும் தோன்று கின்றன. இவைகளெல்லாம் இறைவனுக்கு ஒரு திரு விளையாடல். சிறுபிள்ளைகள் மண்வீடுகட்டி வாழ்ந்து அழிந்து விளையாடுதல்போல், இறைவனும் இன்றி யமையாக் காரணங்கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தொழில்களை ஒரு விளையாட்டாகச் செய்தருளுகின்றார். இதனை நம் மணிவாசகர் "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்கிறார். இங்கு காத்தும் படைத்தும் எனக் கூறப்பட்டுள்ளது கடவுள் படைக்கும்பொழுதே காக்கிறார் (அதாவது கருவிலேயே) என்ற உண்மை பொருந்த மணிவாசகர் இறைவன் விளையாடலைக் கூறி வியக்கிறார். ஆகவே விளையாட்டாக உலகத்தைப் படைத்தார் தமருகத் தால். அங்ஙனமே காக்கின்றார் அமைத்த திருக் கரத்தால். அழித்தலையும் செய்கிறார் சுடர்விட்டெரியும் நெருப்பமைந்த திருக்கரத்தால். நெருப்பு தன்பால் வந்தபொருளை உருக்குலைத்து நீறாக்கும் தன்மையது அல்லவா? அந்த நெருப்பால் உலகை அழிக்கிறார்.

4. மறைத்தல்

நான்காவதாக உள்ள தொழில் மறைத்தல் என்பதாகும். மறைத்தல் இல்லையேல் உயிர்கள் பிறவிக் கடலுக்கு விதையாக உள்ள வினைகளைச் செய்து கொண்டே இருக்கும். உயிர்கள் எக்காலத்தும் பிறவிக் கடலைத் தாண்டவே முடியாது. அந்த உயிர்கள் செய்யும் வினைகளை நிறுத்தி, செய்த வினைக்குத் தக்க வாறு பயனை அனுபவிக்குமாறு பிறவியளித்து, மீண்டும் மறைத்து, கொஞ்சங் கொஞ்சமாக உயிர்கள் தன் (கடவுள்) சம்பந்தமான நல்வினையில் ஈடுபடச் செய்து, பின் அருள் புரிவதுதான் கடவுள் வேலையாகும். ஆகவே மறைத்தல் தொழில் அவசியமாகிறது. மகனை யிழந்த மங்கை யொருத்தி புத்தரிடம் சென்று செல்வனை

எழுப்பி அருள்க, என அவர் 'சாவாதாரில்லத்து ஒருபிடி கடுகு கொணர்க' என்றார். அங்ஙனமே அப்பெண் தேடிக் கிடையாதுபோக உண்மை உணர்ந்தாள். இதனால் இழந்த ஒன்றை நினைத்தால் துன்பமே; மறந்தால் துன்பமில்லை. இங்ஙனமே எந்தத் துறையிலும் மறைப்பு வேண்டியுள்ளது. தொழில் வயப்பட்ட மக்களும் மாக்களும் இன்ன பிறவும தொழிலால் ஏற்பட்ட அயர்ச்சி நீங்க நித்திரை செய்யவேண்டியுள்து. பகலெல்லாம் உழைக்கும் மனிதனுக்கு உழைப்பின் வருத்தம் தெரியாமலிருக்க, அதனை மறைக்க, இன்பக் களியாட்டம் வேண்டியுள்ளது. அல்லது நித்திரை வேண்டியுள்ளது. நித்திரை நீங்கின் மறுபடியும் மிக உற்சாகமாக மனிதன் வேலை செய்கின்றான். இதனால் தொழிலில் ஏற்பட்ட அயர்ச்சி நீங்கவும், முன்னினும் மிக ஊக்கமாகவும் திறம்படவும் செயலாற்றவும் நித்திரை வேண்டியுள்ளது என்பதை அறிகிறோம்.

அந்நித்திரைக்காலத்து நாம் இருளில் அறிவற்று, உணர்வற்று நம்மை மறந்து இருக்கிறோம். நித்திரை நீங்கின் அறிவும பெற்று, தன்னினைவோடு வேலைகளைச் செய்கிறோம். இந்நிலைபோலவே ஆன்மாக்கள் இறைவனருளால் உடல், உலகம், நுகர்பொருள் எல்லாவற்றையும் விட்டு, அணுவினும சிறியதாய் அறிவும உணர்வும் அற்று செயலுமற்று மறைப்பில் மூழ்கி ஓய்வுபெற்றிருக்கின்றன. இந்த ஓய்வில உயிர்கள் இன்ப துன்ப நிகழ்ச்சிகளை மறந்து நிற்கின்றன. இந்நிலையில இருள் சூழ்ந்த ஊழிக்காலத்தில், தான் மட்டும் நள்ளிரவில் நட்டம் பயின்றாடுகின்றான் நாதன். ஆகவே மறைத்தல் என்ற தொழிலை உயிர்களிடத்துவைத்த கருணையால் இறைவன் புரிந்தருளுகின்றான் என்பதை இப்பகுதியால் அறிந்தோம். இம்மறைத்தலை தனது ஊன்றிய திருவடியால் செய்தருளுகின்றார். ஊன்றிய திருவடியானது முயலகனை மிதிப்பதாக நடராஜர் உருவத்தில்

கண்டோம் அல்லவா! அந்தத்திருவடி ஆணவத்தின் வலிமையைப் புலப்படுத்தி நிற்கிறது என்பதை நாம் உணர்தல் வேண்டும். அந்த ஆணவத்திற்கும் உண்மையை மறைக்கும் ஆற்றல் உண்டு. சாதாரண இருள் தன்னைக்காட்டும்; பிறபொருளைக்காட்டாது. தன்வயப் பட்டபிறவற்றையும் காட்டாது. ஆணவ இருள் நீங்கினுற்ருன் ஆன்மா பரிசுத்தம் அடையும். அப்பொழுதுதான் வானோர்க்கும் உயர்ந்த உலகம் புகமுடியும். ஆகவே ஆன்மாவோடு செம்பிற் களிம்புபோல அநாதியாகவே பிடித்திருக்கும் ஆணவத்தின் வன்மையை ஒடுக்கி, சிறிது அயர்ச்சி நீங்கி, ஓய்வுபெற ஆன்மாக்களை இறைவன் மறைப்பில் வைத்திருக்கிருன். (வரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

நப்பின்னை

[திரு. சி. வ. சுப்பையா, மூவலூர்.]

அணியுடை ஆதிரைத் திருநாள் தொடங்கி எண் தினங்கள், ஆனந்தத்தேனிருந்த இடைமருதில் - ஈசன் உகந்து உறைந்தருளும் இனிய திருப்பதியிலே, அரிய முறையிலே கொண்டாடப்பட்ட நல்விழாமகாநாட்டிலே, சிலநாட்கள் ரசித்து ஈடுபடும் பேறுபெற்றேன். தமிழ் வளர்க்கும் திருத்தருமபுர ஆதீனப் புலவர்மணி, திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் பொன்மொழியால் என் உள்ளம் குளிர்ந்தது. இரண்டாம்நாள் சென்னை, கலைமகள் ஆசிரியர், திரு. கி. வா. ஜகன்னாதன் அவர்களின் இனிய நல்லுரைத் தேனமிர்தத்தால் புலனும் மெய்யும் பெருவிருந்துற்றன.

ஆறும்நாள் ஆண்டாள் அருளிய திருப்பாவைக் கடைப்பத்து உற்சவம். ஆம்! இம் மார்கழிமாதம் இராபத்து, பகற்பத்து விழாதினம் அல்லவா? பெருமாள் கோயில்களிலே இனிய செவிவிருந்து, அரிய அருள் விருந்து. ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் கழகத்திலே, "நப்பின்னை" என்ற ஒரு சொல்லின் பொருளை புலவர்களைக் கொண்டு விளக்க முயற்சிசெய்தார்கள். எல்லாம் உணர்ந்த இப்பெரியார் திருவுளம் யாதோ? சபையிலே தக்க விடை உதிக்கவில்லை. 'வாருணி' என்னும் இவள் கண்ணன் எட்டு மனைவியர்களிலே ஒருவள் என்றும், 'ராதை' என்பாள் என்றும், 'பூமி பிராட்டி' அம்ஸம் என்றும் பலவாறு சொன்னார்கள்.

இந்த மங்கலச்சொல் அப்போது என்னைக் கவரவில்லை. உண்மைப்பொருளையும் ஆங்கு வெளியிடத் தக்க துணிவு ஏற்படுத்தவில்லை. வீட்டிற்கு வந்தேன்; கொஞ்சம் பழைய நூல்களைப் புரட்டி ஆராய்ந்தேன்; இத்துறையில் மிகப்புதியவன்யான். அச்சம் பின்னுக்கு

இழுக்க, ஆர்வம் முன்னே தூண்ட, ஓரளவு வெற்றியொடு கொஞ்சம முன்னேவந்தேன். ஆனல் நாம் ஆய்விற்குக கொண்ட விஷயம, 'பின்னை' தான். 'பூமி தேவி' அம்சம் என்று, ஸ்ரீ ஆண்டாளைப்பற்றிககூறும் வைணவ நூல்கள் எல்லாம கூறும். 'பின்னை' என்ற சொல்லுக்கு 'இலககுமி' என்றே பொருள்கொள்கின்றன தமிழ அகராதி நாவலர் பதிப்பும், இன்னொரு அகராதியும்.

ஈண்டு, பாற்கடல கடைந்தபோது முன்னே விடம் வந்தவுடன் தோன்றியவள் மூத்தாள் இவளை மூதேவி, ஜேஷ்டாதேவி, பெரியமமை என்றெலலாம சொலவர். பினனல் வந்தவள் அமுதொடுவந்தாள். அழகம்மை இவள். இவளை இளையாள், பின்னை, இலககுமி என் றெல்லாம் சொல்வர் என்பது சிந்திககத்தக்கது.

உற்றுநோககுமிடத்து, பூமாதேவி துவாபரயுகத்தில் கண்ணன் காதலி பாமாவாகப் பிறந்து, அன்னனை காத லால் கட்டுப்படுத்தி, கற்புமிகக திருஅமச ருகமணியைச் செருக்கொடு சககளத்தி காய்ச்சலால் கொடுமைப்படுத்திய வரலாறு பாகவதநூலில் அழகுற எடுத்துககாட்டுவது சிந்தனைககு உரியது. "பாரிஜாதம் அலலது பாமா விஜயம" இன்னும் கிருஷ்ணலாபாரம், கருடகர்வ பங்கம் முதலியவை இவற்றிற்கு எடுத்துககாட்டு. ஸ்ரீ ராமவதார காலத்தில் சீதாவாகப் பிறந்தருளிய திருமகளே ஸ்ரீ கிருஷ்ணவதார காலத்தில ருக்மணியாக அவதரித்தருளினள் என்பதறகுத் தகக சான்றுள.

ஊன்றிப் பார்க்கவேண்டும். பதினன்கு வருடம் கானில் அலைந்து பிறன் சிறையில் வருந்திய சீதா, ருகமணியாகத் தோன்றி வளர்ந்தகாலத்தே அளவற்ற இன்பவாழ்வில் கண்ணனெடு ஈடுபட்டாள். இராவணன் விரும்பிய சீதா – ருகமணியாகப் பிறந்தமையால்தான் இராவணனும்ச சிசுபாலன் இவளை விரும்பலுற்றன். கண்ணன் இதில் வெற்றிபெற்றன். ருகமணியிடத்து

மிளிர்ந்த அழகு, கற்பு, அறிவு முதலிய நற்குணங்களைப் பொருமைக்கண்ணுல கண்ட பாமா வெறுத்து ஒதுக கினுள். பாமாவாகப் பிறந்த பூமா, ஆண்டாளாகிய நங்கண்ணன் காதலி, நப்பின்னேயைப் பாராட்டுகிருர். எப்படி என்பதை ஆண்டாள் திருப்பாவையிலே காண் போம.

"நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னுய்!
கந்தங் கமழுங் குழலீ! கடைதிறவாய்."

'நந்தகோபாலன்' என்னும் யசோதாபதியான யாதவ மன்னனின் மருமகளான நப்பின்னையை, "வாசம் வீசும் கூந்தலுடையாய்! நந்தகோபன் மருமகளே! கதவைத்திற" என்று எவ்வளவு அருமையாக அழைக் கின்ருர் பாருங்கள்! இன்னும்,

"பந்தார் விரலீ! உன் மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து."

அந்தச் செந்தாமரைக்கையிலே பந்து விளங்க, வளை குலுங்க வந்து திறககவேண்டுமாம். உன் மைத்துனன் பேர், யான்பாட நீ கதவந்திற; இதில் எவ்வளவு உண்மை! ஆழ்ந்து நோககவேண்டும்.

இனி, கண்ணனை எழுப்பும்போது,

"கொத்தலர் பூங்குழல் நப்பின்னே"

எனப் பாராட்டுகிருர். நப்பின்னையைத் துயிலுணர்த்து கின்ருர்.

"நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்"

இச்சீரடிதான் நம் ஆய்வுக்கு உரியது. 'நப்பின்னை' எனும் பெண்மணியே! திருமகளே! துயில் எழாய் என்பது. திருமகள், ருக்மணி, நப்பின்னை என்ற மூன்று திருநாமங்களும் ஒருவரைககுறிக்கும் சொல்தான் என விளங்குகிறது.

ஏந்திழை நப்பின்னை, 'திருமகளே' என்பதற்கு இன்னொரு உதாரணம். கம்பன் - ஔவை சிலேடை வாககுவாதத்தே ஒருசொல். 'பெரியம்மை' இது மூதேவியைக குறிக்கும். கம்பன் வசை விடுகவிககு விடை கூறிய ஔவையார், 'கழுதையே' என்று வையவேண்டி, "பெரியம்மை வாகனமே" என்றார். பெரியம்மை மூதேவி என்றால் சின்னம்மை, சீதேவிதானே!

நம் பண்டைத் தமிழர் நந்தமிழ்நாட்டை ஐந்திணையாக வகுத்தனர் வளம்கருதி. இவற்றுள் பெரிதும் பயன் படாப் பாலையை நீக்கி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நாலையும்கொண்டு, 'நானிலம்' என்றனர். இவற்றுள் குறிஞ்சி எனும மலைப்பிரதேசத்தேவாழும் குறவர் முருகனையும, வள்ளியையும் ஒருங்கே வழிபட்டனர். 'முல்லை' எனும வனப்பிரதேசத்தே வசிக்கும் ஆயர்கள் கண்ணனையும், நப்பின்னையையும் கடவுளாகக கருதி வழிபட்டனர்.

இளங்கோ சொல்கிறார் சிலம்பிலே. ஆயமாதர்கள் துன்பந்தீர, 'ஆய்ச்சியர்குரவை' எனும் ஆடல் இசை பாடி ஆடி வணஙகினார்களாம்; ஏழுபெண்கள்கைகோத்து ஆடினார்கள்.

> "மாயவன் என்றாள் குரலை விறல்வெள்ளை
> ஆயவன என்றாள் இளிதன்னை—ஆய்மகள்
> பின்னையாம என்றாள் துத்தத்தை மற்றையார்
> முன்னையாம என்றாள் முறை."

ஏழிசைககும் தமிழிலே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர். இந்த ஏழிசைப் பெயரையும் 'மாதரி' எனும் யாதவர் தலைவி தன் பெண்களுக்கு இட்டிருந்தாள். இவர்களை, வணஙகத்தக்க கண்ணனுக வென்று வளர்த்துவந்தவள், குரவைக்கூத்தால் அவனை மகிழ்விக்க முறைப்படி நிறுத்தி, 'குரல்' என்பாளை மேற்கே நிறுத்தி அவளை, 'மாயவன்' என்றாள். இடப்

புறம் 'துத்தம்' என்பாளை நிறுத்தி, 'பின்னை' எனப் பெயரிட்டாள். அடுத்த 'இளி' தனை 'பலராமன்' என்ருள். மற்றையர் மற்ற கோபியர். இப்படிவைத்து ஆடி மகிழ்ந்தாளாம்.

இனி 'பின்னை' என்பாள் நப்பின்னை ஆனது எப்படி? நல்பின்னையா? நம்பின்னையா? நப்பின்னை தான். நம்மாழ்வார் – நஞ்சடகோபன் ஆனதுபோல. 'நப்பின்னை' எனும் சொல் ஆழ்வார்காலத்துக்கு மூந்திய சங்ககாலமுதலே வழக்கில் இருந்து வருகிறது. ஆனல் ராமாயண – பாரதகாலத்தில் இச்சொல் வழங்கியதாகத் தெரியவில்லை. இறைவனைச் சத்தியொடு பொருத்தி வழி படுதலே முறையல்லவா? பிரிக்கமுற்பட்டால் ஆபத்தே. சீதாராமன், பார்வதிபரமேசன், வள்ளிகாந்தன் இவர்களை சத்தியொடு வழிபடவேண்டியது அவசியம்தான். சீதாவை ராமனைவிட்டுப் பிரித்து, சீதாவிடம் விருப்பும் ராமனிடம் வெறுப்புங்கொண்ட இராவணன் சிரங்கள் இழந்தான். ராமனை சீதாவைவிட்டுப் பிரித்து ராமனிடம் மோகமும், சீதாவிடம் துவேஷமும்கொண்ட சூர்ப்பநகை நாசியிழந்தாள். சத்தி – சிவத்தைபிரித்த பிருங்கி சத்தி (வலிமை) இழந்தார். எனவே இது அவசியந்தான். இம்முறையில் ஸ்ரீ ஆண்டாள் கண்ணன் வழிபாட்டில், பாவை நோன்பிலே கண்ணனெடு – நப்பின்னையைச் சேர்த்தே பாடுகிருர். ஆம்! சைவத்திலே வாதவூரடிகள் திருவாசகத்தேனில் திருவெம்பாவையிலே சத்தியை வியந்தபோது,

> "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
> பொங்கு மடுவில்"

என்றும், அருளை வியந்து சத்தியை வணங்கும்போது,

> "தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
> முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
> என்னப் பொழியாய் மழையே"

என்றும் அருளியது நினைவுவரும்.

தெய்வ-நீதி

[C. S. பாலு.]

அங்கம் 4.

[அறிவற்றபெண்! அலறினள். துடித்தாள். அவளின் அலறல், பணத்தைப் பறித்துக்கொண்ட அந்தப் பாவிகளின் காதுகளில் ஏன் விழப்போகின்றது. சிந்தித்தாள்! சிந்தனையின் பலன் சித்தந்தான் கலங்கது. ஆதரவற்ற அவள் அண்ணு என்று கதறினள். கானகம் சென்ற அவன் காதிலா இவளின் அலறல் கேட்கும்.]

அம்மா! என்றான் குழந்தை.

கண்ணே! கலங்காதே! ஆருமற்றபேருக்கு ஆண்டவன் யிருக்கின்றான. அஞ்சாதே! வா; ஞாதிகள் உன் சொத்தைப் பறித்து விடலாம. ஆனால் உன் அறிவையும, அதிர்ஷடத்தையும பறிகக முடியுமா? நமக்குத்துணை! அங்கயற்கண்ணியும, சோம சுந்தரருந்தான்,

[தெளிந்துவிட்டாள். அவளது பொறுமையின் கண்கள் புத்துணர்வு பெற்றுவிட்டது. தாயும, சேயும விரைந்தார்கள்.]

'அம்மையே! அப்பா! நீங்கள் நல்லதீர்ப்புக கூறுங்கள்'

'நான் அபலை! என் அண்ணன்தந்த சொத்துக்களை அவனது ஞாதிகள் பறித்துக்கொண்டார்கள். நீ உலகத்தில் உண்மையை உணர்ந்தவன். துணையற்றவள் நான். எனக்கு இந்தச சிறுவன் தான் துணை, நான் பெண்! எனககு யார்துணை. பணமற்றநான் எப்படி என் ஒரேபிள்ளையைவைத்துக்காப்பாற்றுவேன். நீதியும் நியமமும், இன்னதென அறியாத குழந்தை என்னசெய்வான்'

[இவ்வாறு சொல்வதற்குள்ளேயே அவள் கருணைக்கண்களி லிருந்து ஜலம்வடிந்தது. உள்ளம் உருகத் துதித்தாள் அந்தப் பெண்! பாவம் அதே ஏக்கம்! சந்நிதானத்தின் முகப்பிலேயே தாயும், சேயும் சாய்ந்துவிட்டார்கள்.]

'பெண்ணே! கலங்கவேண்டாம்; போ; சிதைந்த மனதைச் சீர்படுத்திக்கொள். நாளைகாலையில் வலிய உன்ஞாதிகளை வம்புக்கு இழுத்து அரசன் செவிக்கு எட்டும்படி செய். நானே அந்நிலையில் குழந்தையின் மாமனாகவந்து நீதியை நிலைநாட்டுகிறேன்' என்றார் எல்லாம்வல்ல ஏகனாதர்.

'என் அப்பன் சொல்லிவிட்டான். நான்கண்டது கனவு இல்லை. நிஜ அமிர்தவார்த்தைகள். வாடா கண்ணே! அங்கயற் கண்ணி, நம் ஏழையின்மீது கண்ணைத்திறந்துவிட்டாள்! வா! போகலாம்' என்று தன்குழந்தையைக் கூட்டிக்கொண்டு வீட்டை அடைந்தாள்.

அங்கம் 5.

[எப்பொழுது பொழுது புலரும் என்று காத்துக்கொண் டிருந்தாள். ஆதவனும், சிவனின் தீர்ப்பைக் கேட்க வெகு சீக்கிரத்தில் வெளிவந்துவிட்டான்போலும்!]

'என்ன ஓய்! சோமநாதரே! தனபதியின் தங்கை விடிந்த தும் விடியாததுமாய், சண்டைக்கு வந்துவிட்டாளே!'

'என்ன குணநாதரே! அவளுக்கு ஏதாவது பைத்தியமோ!'

'அவளுக்கு அவன் அண்ணன் சொத்துக்கள் வேண்டுமாம்'

அறிவு நிரம்பிய அவள் அரசரிடம் சொல்லி சொத்தை வாங்கிக்கொள்ளட்டுமே என்றுசெல்லிக்கொண்டே அவர்களின் முன்னிலையில் வந்து அமர்ந்தார் அமரேச வணிகர்.

'ஏன் ஐயா! அவள் அரசனிடம் சொன்னால், அரசன் வாங்கிக்கொடுத்துவிடமாட்டாரோ' என்று உலகம் அறிந்த உத்தமனானந்தர் சொன்னார்.

'போம் ஐயா! அவள் போய் அரசனிடம் சொல்லி விடுவாளோ?'

'சொல்லிவிட்டால்.'

'நாமும், வழக்கைத் தொடர்கிறோம்.'

'ஏன் ஐயா! நான்கேட்கின்றேன் என்று வருத்தம் வேண்டாம். உண்மையிலேயே நாம செய்தது அநீதிதானே!'

எழுந்திரு; நீதிபேச வந்துவிட்டான் என்று சீறிவிழுந்தார் ருத்திரமூர்த்தி வணிகர்.

அங்கம் 6.

'ஏன்; நீதிபேச இங்கு நியாயமில்லையோ? என்றாள் அண்ணலின் அருளைப்பெற்ற அணங்கு.

'அம்மா! நீதியா வேணடுமா?'

'ஆமாம; பத்தினிப்பெண் நீதிகேட்டுப் பாண்டிய சாம்ராஜ்யத்தையே அழித்த அதே பாண்டிய மதுரையில்தான ஞாதிகள் என்ற முறையில் உங்கள் முன் நீதிவேண்டி மன்றாடுகிறேன்.'

'நீதியா வேண்டும் இநதா,' என்று ஞாதிகள் தம்மால் ஆனவரையில் அபலையை நையப்புடைத்தார்கள்.

அங்கம் 7.

பாண்டிய சாம்ராஜ்யத்தின் ஏகசக்ராதிபதி சுநதரேச பாண்டியன் திருசசெவியில் பட்டுவிட்டது. இனிதீர்ப்பு இரண்டில் ஒன்று. ஞாதிகளும, தனபதித தங்கையும அரசரின் முன்பு நீதியைவேண்டி நிற்கின்றாகள். அந்நிலையில்தான் பாண்டிய சாமராஜ்யமே ஆச்சரியப்படும்படியான சமபவம நிகழ்ந்தது.

இல்லறத்தை வெறுத்துக் கானகம் சென்ற தனபதி பழைய படிக்கும் தன் நாடான மதுரைக்கு வநதுவிட்டான். ஏன் துறவறத்தை வெறுத்தான்? இல்லை. தன் தமக்கையின் மகனை அநீதியின் பிடியிலிருந்து விடுதலை செய்வதற்காக. அவன்

வைத்தியக்காரன் என்று ஞாதிகள் குற்றம்சாட்டினர். சிலர் அவன் அறிவுநிரம்பியவன் என்று ஆமோதித்தார்கள. உண்மையாகவே அவன பழைய தனபதியேதான் என்று தீர்ப்புக் கூறினார்கள்.

அவன் தனபதிதானு! இல்லை. தனபதிபோன்ற உருவம் படைத்த வேற்றுமனிதனு! என்று காலமும் சத்தியமும தீர்பபுக் கூறக் காத்துக்கொண்டிருந்தன.

அரசே! என்று பெருமூச்சுவிட்டார் உத்தமசிலர். சிநதனையின் எல்லையைத் தொட்டுக்கொண்டிருநத பாண்டியன் என்ன! ஞாயத்தின் அடையாளம சறறுக்கூட கிடைக்கவிலலையே என்றான் ஏக்கக்குரலுடன்.

'அரசே! சிக்கலானபிரச்சனை. இதற்கெல்லாம காலந்தான் பதில்சொல்லவேண்டும' எனறார் மந்திரியாா.

'அரசே! காலம வேண்டாம நான்யார்; எப்படி? கானகத்திற்குச சென்றவன் திருமபிவந்துவிட்டேன் எனறு நினைக்கின்றீர்களா? சநதேகமவேண்டாம். அவள் நிரபராதி! அவள் என் ஆருயிர் தங்கை. அவளின் ஒரே மகனை, நான் என் பொருளுககாகவும, வாழ்க்கையின் அந்தியில எனக்கு மோட்சம வாங்கிககொடுக்க அருகதையுள்ளான் என்ற நியதிக்காகவும, இதோ, இசசிறுவனை நான் ஸ்வீகாரமாக எடுத்துக்கொணடேன்' என்றாா தனபதி.

பாண்டியன் சபையில் கண்ணீருடன்நிற்கும தனபதியின் தங்கையை ஒருதடவை பாண்டியமன்னர் பார்ததார்.

'பெண்ணே! அவர் உன் அண்ணன்தானு?'

'ஆமாம.'

'மகனை ஸ்வீகாரம எடுத்துக்கொண்ட நீ ஏன் கானகம் செல்லவேண்டும?'

"உண்மை தாங்கள் கேட்பது ஞாயம். எனக்கு இனி குழந்தை பிறககாது என்று நன்கு தெரியும்; எனினும நான் என் மனைவியான சுசீலையின்பேரில் அளவுகடந்த அன்பு வைத்திருந்தேன்."

'சந்தோஷம்: அவவளவு குடும்பப்பற்றுள்ளமனிதனுகிய நீ ஏன்? இல்லறத்தைவிட்டாய்?'

'அரசே! சறறுபபொறுங்கள். அவசரம வேண்டாம. நான் சுசீலையினபேரில், அன்பாகநடந்துகொண்டதற்கு இரணடுவித காரணங்கள் உண்டு ஒன்று அவள் தனக்குக குழநதைபிறக்காவிட்டாலும நான் சுகமாகவாழவேணடும என வாழ்க்கையின் பாதை என்றும செழிபபுடன் இருக்கவேண்டும எனறு விருமபினுள் அநத அனபின அடையாளமே அவள்பேரில் நான் அளவுகடநத அன்புவைகக நேரிட்டது. மற்றொன்று: தங்கையின் பிள்ளையை நான் ஸ்வீகாரம எடுத்துக்கொணடேன். எங்கே தன்பேரிலிருக்கும அன்பு குறைநதுவிடுமோ என்று பயந்தாள். எனவே பயநத உள்ளத்தைத் தெளியவைக்க நான் முன்பு இருந்ததைககாட்டிலும பன்மடங்கு அனபை அவளிடம் செலுத்தினேன் எங்களது அன்பும வயதும என் தங்கைக்குப பிடிககவிலலை; அதன் விளைவு ஒருநாள என் தங்கை என்னிடம ஆத்திரமாகபபேசினுள. அஞ்ஞானத்தின் பிடியிலிருநத நான் மேலானபடிககுபபோக எனககு வழிகாட்டியாக இருநதாள் என்தங்கை!'

'சநதோஷம: தனபதியாரே! இத்தனைநாள் கானகத்திலிருநத தாங்கள் எங்ஙனம இன்று இவ்விடம வரநேர்ந்தது?'

'அரசே! மன்னிக்கவேண்டும; காரணம நான் அறிகிலேன். பல சிந்தனைகள்! என்னவோ ஒருவித ஆக்ஷர்ணசக்தி இவவிடத்தில் தள்ளிக்கொண்டுவநதது.'

'தனபதியாரே! இவவிடம வந்தபிறகுதான் இதுசெய்தி தெரியுமா? அல்லது தாஙகள் புறபபடும்பொழுதே தெரியுமா?'

'அரசே! இங்கு வந்தபிறகுதான் நான் அறிந்தேன்.'

'சந்தோஷம்.'

அங்கம் 8.

'பெண்ணே! போகும்பொழுது உன் குழந்தைக்கு நகை நட்டுகள் ஏதாவது உன் தமையன் போட்டுச் சென்றானோ?'

'உண்டு அரசே!'

'தனபதி! தாங்கள் போட்டுச்சென்ற நகைகள் ஏதாவது தங்கள் ஞாபகத்தில் தோன்றுகின்றதோ?'

'செங்கோலாகிய நுண்ணிய நூல்கொண்டு கட்டிய தரும மாகிய நீதியின்பீடத்தில் அமர்ந்து அரசாட்சிபுரியும் அண்ணலே! கேளுங்கள்! நான்போகும்பொழுது என்குழந்தைக்கு அணிந்து சென்ற பஞ்சாயுதபாணி காண்கிலேன், சிறு சிலம்பினைக் காண் கிலேன்; வாகுவலயத்தைக் காண்கிலேன்; முகத்தில் தொங்கிய சுட்டியைக் காண்கிலேன்; அழகுபொருந்திய காதுகளிலிருந்த குண்டலம் காணகிலேன்; இன்னும் அரசே! கைகளில் அழகாகக் காட்சிகொடுத்துக்கொண்டிருந்த தங்க வளையல்களைக் காண் கிலேன்'

'பெணணே! அவர் சொல்வது யாவும் உண்மைதானோ?'

'ஆமாம்!' என்றாள் நிரபராதியான தனபதியின் தங்கை.

'ஞாதிகளே! தனபதி சொல்வது யாவும் உண்மைதானோ?'

'அரசே! இல்லை இல்லை யாவும்பொய்! குழந்தையை நாங்கள் பார்க்கும்பொழுது வெறும் உடலுடன்தான் இருந்தான்.'

'அரசே! அவர்கள் சொல்வது எல்லாம் சுத்தப்பொய்' என்று வாதாடினார் தனபதி.

'மந்திரியாரே! இது என்ன பெரும்சோதனையாய்ப் போய் விட்டதே' என்றான் பாண்டியன்.

'அரசே! கேளுங்கள்' ஏழையின் சொல்லை.

அன்பு என்ற அரசாட்சியில், சத்யம என்ற பீடத்தில், நீதி எனற செங்கோல் தாங்கியுள்ள தாங்கள் சிந்தியுங்கள். ஒரு கறபின் பெண்ணிறகாகப் பாண்டிய வமசமே சீரழிந்துவிட்டது. தாங்கள கற்றுணாநதவாகள. ஞாயத்தின் எல்லைகண்டு அறிநத அறிஞா. அநீதியை விளக்கி, நீதியை நிலைநாட்டுங்கள். சங்கீதக மிருப்பின், என ஞாதிகளின் பூர்வபரமபரையைச் சொல்கிறேன்.

'தனபதியாரே! நீர் சாதாரண மனிதர் அல்ல! சொல்லுங் கள் உண்மையை' 'ஞாதிகளே! கேளுங்கள் உம பரமபரையின் பெருமையை.'

ஞாதிகள்கேட்ட விடைக்குத் தகுந்தபதில் பகர்ந்தார் ஏழை பங்காளா. நீதி நிலைபெற்றுவிட்டது; சத்யம் வெற்றிபெறறு விட்டது. அரசன் செங்கோலுக்கு அஞ்சினர் ஞாதிகள். முடிவு என்ன? ஒருவன வெளியில்ஓடினான்; மற்றொருவன் குளிக்கநக குறிப்பிட்டுச சொல்லிவிட்டு விரைநதான்; இன்னுமபலா பலபல குறுககுவழிகளில் தப்பித்துக்கொள்ள முயன்றாகள். பெருமகாற்றிறகுப பயந்து, அடித்துக்கொண்டுபோகும் மேகக்கூட்டம் போல் ஓடினார்கள ஞாதிகள். நீதியின் தீாப்பு சொத்துக்கள் யாவும தனபதியின் ஸ்வீகாரபுத்திரனுககே அளிககப்பட்டது.

அரண்மனையின் நீதிஸ்தலத்தில் நின்றுகொண்டிருந்த தனபதி எங்கே என்ற பெருங்குரல். பாண்டிய அரண்மனையே அதிருமபடி கோஷமிட்டார்கள் ஜனங்கள்.

'அரசே! வாழ்க! உன் செங்கோல் வாழட்டும!! ஆதரவற்ற அபலையின்பொருட்டு நாமே, அவளின் குழநதைக்கு மாமனாக வநது வழக்குரைத்தோம அஞ்ஞானம்ஒழிந்து, ஞானம் உலகில் பரவட்டும என்று சொல்லிப் பாணடியனுககும், மற்றவர்க்கும் காட்சிகொடுத்தார் அம்மையப்பர்.

மூன்று புருஷரத்னங்கள்

பிர்மஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரிகள், M. A., B. L,

மாத்ருகுப்தன் அரசனிடம தன் கஷ்டநிலைமையைத் தெரிவித்தும நிஷ்பலமாகி விட்டதே என்று மனம் ஒடிந்துபோனான். "நாமசெய்யவேண்டியதைச் செய்தாகி விட்டது. சந்தேகம தெளிநதது. ஊர் வதநதியைக கேட்டு மோசமபோனோம். ஆசையின் ஆர்பாட்டம் ஒழிந்தது. இனி கால்போனவழி நடககவேணடியது தான். அரசன கொடையாளிதான. ஆனால் எனபாவம் அப்படிப்பட்டது. என்னிடம் அரசன் வெறுப்படையும் படியான ஒருகுற்றங்குறை இருப்பதாக எனககு எவ்வளவுசிந்தித்துப் பார்ததாலுமதெரியவிலலை. ஆனால் அரசன் என்னைச் சிறிதும பொருட்படுத்தவிலலை. காரணமஎன்னை? என் எளியதனமே என்று தோன்று கிறது. நான் அரசனிடம வருமபோது பிருதுகளுடன் படாடோபமாய் வந்திருந்தால் என்னை மதித்திருப்பான். பிரபுககள் தோரணையே அப்படித்தான். நான் ஒரு ஆதரவு, அத்தாக்ஷி, பிருதம், படாடோபம ஒன்றும் இலலாமல எளியவனாய் இவனை வந்து அண்டியபடியால் இவன் மதிப்பிற்குரியவனாக ஆகவிலலை. இது தான் தத்துவம்.

तिष्ठन्ति ये पशुपतेः किल पादमूले
संप्राप्यते झटिति तैर्न हि भस्मनोऽन्यत् ।
ये तद्वृषस्य तु समुज्ज्वलजातरूप-
प्राप्त्या न कानि सुदिनानि सदैव तेषाम् ॥

பரமேச்வரனின் அருகாமையில் இருந்து சேவை செய்பவர்களுககு சாமபலைத தவிர வேறு கிடைப்ப தில்லை. அவருடைய காளைமாட்டை அண்டியிருப்பவர் களுககு நிரநதரமாய்ப் பிரதிதினமும் தங்கத்தின் லாப மானது கிடைககிறது.

[நந்தி தர்மஸ்வரூபி. அவருடைய உபாஸகர்கள் திவ்யஸௌந்தர ரூபத்தையும் ஸௌவர்ண மயமான ஸம்பத்தையும் அடைகின்றார்கள். இவ்விதம் ஈச்வரன் நந்திக்கு அனுக்கிரகித்தகதையை ஸ்காந்தத்தில்காண்க]

இவ்வித சிந்தனைகளில் மனம் உடைந்துபோன மாத்ருகுப்தன் பொழுது விடிந்ததும் எத்திசையாவது நோக்கிச் சொல்லிக கொள்ளாமல் புறப்பட்டு விடுவது என்று தீர்மானித்துக கொண்டான்.

ஆனால் விடிந்தபின் அரசன் ஆஸ்தானத்தில் வந்து அமர்ந்தவுடன் மாத்ருகுப்தனை அழைத்துவர மெய்க் காப்பாளனுககு உத்திரவிட்டான். மாத்ருகுப்தன் நம்பிக்கை இழந்துவிட்டதால் சற்று வெறுப்புடன் அரசன்முன்வந்த வணங்கினான்.

அரசன் "காச்மீரம் நீர் போயிருக்கிறீரோ" என்று கவியைக கேட்டான்,

கவி 'நான் போனதில்லை' என்று பதிலுரைத்தான்.

அரசன் புன்னகை புரிந்தான். "நம் படை ஆட்களில சிலரைத் துணை அனுப்புகிறேன்; போய்வாரும். அங்குள்ள அதிகாரிகளிடம சேர்ப்பிககவேண்டி முக்கியமான கட்டளை ஒன்று இருககிறது. அதை நீர்தான் எடுத்துச்செல்ல வேண்டும். ஜாக்கிரதையாய் எடுத்துச் செல்லும. வழியில் முத்திரையை உடைத்து உத்திரவை வாசிககககூடாது. ரகசியமானதும முக்கியமானதும் ஆகையால் உம்மிடம் இந்தககாரியத்தை ஒப்புவித்திருக்கின்றேன்; புறப்படும் உடனே."

ஒரு ஆஸ்தான அதிகாரி முத்திரையிட்ட ராஜா சாஸனத்தை மாத்ருகுப்தனிடம் ஸமர்ப்பித்தான்.

மாத்ருகுப்தன் தலைவிதியே என்று சோகத்துடன் உத்தரவை மறுக்கமாட்டாமல் சாஸனத்தைப்பெற்றுக்

கொண்டு காச்மீரத்திற்குப் பயணமானுன். ஸபையில் இருந்த எல்லோரும் அவனை நினைத்துப் பரிதாபப்பட் டார்கள். இககவிச்ரேஷ்டரையா இத்தகைய வேலையில் ஏவிக கிலேசப்படுத்துகிறது. ஆனல் மாத்ருகுப்தன் தானுகத்தான் தன்பெருமையைக குறைத்துக்கொண்டு விட்டான். இராப்பகலாக அரசன் மாளிகையே கதி என்று காத்துக்கிடந்து எந்த ஸேவையையும ஏற்றுக் கொணடானல்லவா? அதனுல் அரசன் இவனை ஒரு ஏவலாள் செய்யககூடிய காரியத்தில் நியமித்தான் போலும்'' என்று.

மாத்ரு குப்தன் பல நற்சகுனங்கள் எதிர்ப் பட்டதை நோககி மனம் தெளிந்து வழி நடந்தான். அவன் தங்குமிடங்களில் அவனுககு அமோகமாய் உபசாரங்கள் நடந்தன. காச்மீர தேசததின் எல்லையை மிதித்ததும் மாத்ருகுப்தனை அதிகாரி வர்ககத்தினர்கள் எதிர்கொண்டுவந்து புது ஆடைகளைத் தரிககச்செய்து வாகனமேற்றி அழைத்துச்சென்றனர். சக்ரவர்த்தி தூதன் என்ற பெருமைககாகத் தனக்கு விசேஷ உப சாரங்கள் நடப்பதாக மாத்ருகுப்தன் எண்ணினுன். அநேக நாடு நகரங்களை கடந்து ஸ்ரீ நகரத்தை அவன் அடைந்ததும அங்கு ஸாமந்தகர்களை மந்திரிகள் எல் லோரும் இருக்கும் இடத்திற்கு அவன் ஒருவிதத்தடையு மிலலாமல உள்ளேசெல்ல அனுமதிககப்பட்டான். மந்திரிகள் ஸாமந்தர்கள் ஒவ்வொருவரும் அவனுககு வரவேற்பு மரியாதைகள்செய்து உன்னதமான ஆசனத் தில் அவனை உட்காரச்செய்தார்கள். பின்பு சகரவர்த் தியின் ஆககை என்ன என்று வினயத்துடன் பிரதான மந்திரி மாத்ருகுப்தனை வினவினுன். மாத்ருகுப்தன் லஜ்ஜையுடனும பயத்துடனும் விகரமாதித்யனுடைய சாசனப் பத்திரிகையை எடுத்துககொடுத்தான். மந்திரி களும், சாமந்தர்களும் அப்பத்திரிகையைச் சிரத்தில் வைத்து, கண்ணில ஒத்திககொண்டு கௌரவித்துவிட்டு

ஓரிடத்தில் கூடிப் பேசித்துப்பார்த்து ஆக்ஞையை அறிந்துகொண்டு மாத்ருகுப்தனிடம் வந்து வினயத்துடனும் பக்தியுடனும் பணிந்துநின்று "தாங்கள்தானே மாத்ருகுப்தன்" என்று வினவினார்கள். மாத்ருகுப்தன் ஒன்றும் புரியாமல் திகைத்துப்போய் 'ஆம்!' என்று தலையசைத்தான். உடனே மந்திரிகள் ஸம்க்ஞைசெய்ய, முன்னதாகவே தயாராக வைக்கப்பட்டிருந்த பட்டாபிஷேக ஸம்பாரங்களெல்லாம் சேவகர்களால் கொண்டு வரப்பட்டன. ஒருக்ஷணத்தில் பெருங்கூட்டம் கூடியது. வாத்தியகோஷம் முழங்கிற்று. தீர்த்தம் முதலிய மங்கள திரவியங்களுடன் பிராமணர்கள் வந்தார்கள். வேத மந்திரங்கள், வாத்யகோஷங்களின் நடுவே பட்டாபிஷேகம் நிறைவேறியது. மாத்ருகுப்தன் அபிஷேகத்திற்குப் பின் ராஜாலங்காரங்களுடன் சிம்மாசனமேறி சபையில் அமர்ந்தான். சபைத்தலைவர்கள் வணக்கம் செய்து, "விக்ரமாதித்யபூபதி தனக்குச் சமானரான ஒருவரைக் காச்மீர தேசத்திற்கு அரசனாய் நியமித்திருப்பதாய்ப் பத்திரிகை அருளியிருக்கிறார் அரசே! காச்மீரத்தை ரக்ஷித்து, எங்களை எல்லாம் மகிழ்விக்க வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். மாத்ருகுப்தன் தன் பிரபு தனக்குத்தந்த வெகுமானத்தை நினைத்து நினைத்து உள்ளம்பூரித்து ஆச்சரியத்தில் மூழ்கியிருப்பினும், உணர்ச்சிவேகத்தை ஒருவாறு உள்ளே அடக்கிக்கொண்டு, புன்னகைபூத்த முகத்துடன் உபசாரங்களை ஏற்றுக்கொண்டான்.

அன்று உத்ஸவ மங்களங்கள் விரிவாக நடந்தன. இரவு பட்டணப்பிரவேசம் விமரிசையாக நடத்தப்பெற்றது. மாத்ருகுப்தன் தனக்கு ராஜ்யத்தை சம்மானமாக அளித்த விக்ரமாதித்யசக்ரவர்த்திக்குச் சிற்றரசன் என்ற முறையில் முதலில் உயர்ந்த காணிக்கைகளைத் தக்க தூதர்கள்மூலம் அனுப்பித் தன் பணிவைத் தெரிவித்துக்கொண்டான்.

அடுத்தாற்போல் தன் பழைய ஸ்திதியைத் தான் மறககவில்லை என்று தன் பிரபுவுக்கு அறிவிக்கும் பொருட்டுச் சில தனிப்பட்ட ஆர்பாட்டமற்ற தூதர்களைக் கொண்டு ஏழைககுரிய காணிககை சாமானகளுடன் பின்வரும சுலோகத்தையும எழுதி அனுப்பித் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டான்.

नाकारमुद्वहसि नैव विकत्थसे त्वं
दित्सां न सूचयसि मुञ्चसि सत्फलानि।
निःशब्दवर्षणमिवाम्बुधरस्य राजन्
संलक्ष्यते फलत एव तव प्रसादः॥

"வெளிப்படையான குறிப்புகளைக காணேம. தறபுகழ்ச் சியும் கிடையாது. கொடுக்கப்போவதாகவும சூசனைகளை வெளிப்படுத்துவதில்லை. ஆனால பெரும் கொடையாகக் கொடுககிருய்! ஹே அரசே! சப்தமில்லாமல் இடை விடாது வர்ஷிககும் மேகத்தின் கொடைபோல உன கொடையும் கிடைத்தபின்தான் புலனுகிறது."

(வரும்)

ஆதீன வெளியீடு.

திருவாசகம்

நூலாராய்ச்சி, அரும்பொருளகராதி இவைகளும் சேர்ககப்பெற்றுள்ளன.

காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0.

தபாற்கூலி (Registerd) 0—9—0.

விலாசம்:-

மானேஜர்,
தருமபுர ஆதீனம், தருமபுரம்.
மாயூரம P. O.

அழகுத்தெய்வம்

[சொ. சிங்காரவேலன், தருமை.]

[......முற்றிய எழிலை நாடும் அறிவே பேரறிவு, சிற்றெழிலை நாடிய அவனுக்குச் சிலை அறிவு கொளுத்திற்று. எழில் எது என்பதை — எழிலின் உயிர்நாடி எது என்பதை நல்லும்வகை உரைப்பது இது......]

மாமல்லபுரம் கடற்கரை: முழுநிலவு! பாலை அடைத்து வைத்திருக்கும் குடம் ஒன்றை நெகிழ்த்ததெனச் சந்திரன் தன்வெள்ளொளியை வீசிநின்றான். 'சொக்க வெள்ளிப் பாற்குடமோ' எனக் கவிஞர் ஐயுறத்தக்க காட்சி. பல்லவர்காலத்துச் சிற்பங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக்காட்சியளித்தன. அவ்வின்ப வேளையில் கடற்கரைக்குக் கூப்பிடுதூரத்தில் அமைந்த செம்படவர் குடிசைகளினின்றும் எழுந்த கிராமியப் பாட்டுகள் கடலொலியுடன் கரைந்தன.

சிற்பங்களின் நடுவில் ஒருசிலை: அன்று கலை! ஓர் நங்கையின் சிற்பம். குமுதம்போன்ற இதழ்களில் ஒரு குறுநகை; அலலிபோன்ற அதரங்களில் ஒரு புன்முறுவல்; மதியொத்த முகம்; அருளைக் கொழிக்கும் கண்கள்; கையில் ஒருமலர். இவ்வளவே அச்சிலையின் தோற்றம். அதன் எதிரேயுள்ள மேடையின்மேல் கால்களை அலைகள் கழுவிச்செல்லுமாறு அமர்ந்திருந்தான் ஒரு இளைஞன். அவனது கண்கள் அக்கலையழகை ரசித்துக்கொண்டிருந்தன. மலர்பிடித்துக் கொடிபோல் நின்றிருந்த அம்மலர்க்கொடியின் கலையழகில் அவன் லயித்துவிட்டான். 'கற்பகத்தின் பூங்கொம்போ விற்குவளைப்பவளமலர் விரைபூத்த மலர்க்கொடியோ' என்று ஐயுற்றான். பைத்தியம்பிடித்தவன்போல் இருந்த அவன் பேசினான்.

" அன்னையே! எனது வணக்கத்தை ஏற்றுக்கொள்! செல்வர்கள் - தனவந்தர்கள் செல்வத்திலே வானோங்கி நிற்கும் கோபுரங்களிலே, கலையரண் மனைகளிலே, கலை அன்னையாம் நீ கவினுற்றிருப்பாய் என நினைந்து ஏமாந்தேன். ஆனால், கடலலைகள்-நீர்தெளிக்க வெயிற்கதிர்கள் மிசைப்பரவ-மழைநீர்தன் மருங்கணைய உழைத்துழுத்த உத்தமர்களின் குடிசைபோல, இப்படியிருப்பாய் என்று இப்போதுதான் உணர்ந்தேன். உண்மைக் கலையழகு இருக்குமிடத்தை இன்றுதான் கண்டேன்."

கண்களில் நீர்துளிக்க அமர்ந்த அவன், சிலையடியில் விழுந்தான்.

" இன்பக் கரும்பினுறை இன்சுவையும் நீ
அன்புக் கனிகுண்மனத் தழகுருவும நீ
தென்றல் இசையில்வரும் தெனதமிழும் நீ
உன்றன் அடிபணிந்தேன்; உயர்கலைப் பெண்ணே."

அவனுடைய உவகையுள்ளத்தின் எதிரொலி இக் கவிதை. அடுத்தகணம் அவன்முன்னே ஒரு மின்னொளி! அந்நங்கையுருவம வாய்திறந்து இயம்பத்தொடங்கிற்று.

" மைந்தனே! உள்ளப்புலத்தில் உணர்ச்சியுரமிட்டு, அறிவுப்பயிரை வளர்ப்பதே கலை! அறிவுப் பயிரில், அன்பருமபச்செய்வதே கலை! அன்பருமபச்செய்வதும், அறம் மலரச்செய்வதுமே கலை! அக்கலையுரைத்த கற்பனையேகொண்டு கயமை வாழவில் வாழ்வது இன்றைய தமிழராதுநிலை! இநநிலையை முதலில் தொலை! ஏனெனின், "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொணடாடும் கண்மூடிப்பழககமெல்லாம் மண்மூடிப் போக" என்றுதான் கற்றுத்துறைபோய அறிஞர் பலரும் அறைந்தனர். 'இயற்கை அழகே இறைவன்' என்று கூறுவர் சிலர்; ஆனால் இயற்கையழகு இயற்கையழகா? அது நிலையற்ற எழிலன்றோ? இதனாலன்றோ இயற்கை என்று கூறாது, வள்ளுவரும் 'பேராவியற்கை'

என்ற ஆடையுடன் கூறினர்! அங்ஙனமாய பேரா இயற்கைப் பேரழகு யாதென ஆய்ந்தறிவதே கலைஞன் கடமை.

நீண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி தசையும வேண்டாநாற்ற மிகுமுடலை, வீணே மறைத்து வண்ணம சுண்ணம் வனப்புறப்பூசித் திகழும் உலகியல் மங்கையர் அழகே ஒள்ளிய அழகென உலகவர் ஏமாந் தனர்; அதுவே முற்றிய எழிலென நம்பினர். ஆனல் பெண்ணினம கொண்ட பெட்பு சீரிதன்று என்பது அன்று. ஆனல் அஃதே முற்றிய எழிலன்று என்பது தான் கலைவல்லார் கருணைநிலைகண்டார் கருத்து. அம் முறையில் நிலையற்ற கலையழகு கண்டனை.

ஆனல் உண்மைக கலையழகு காண உவந்தனை; தமிழ்நாட்டின் கலைக்கருவூலங்களான, கோயில்கள்தோ றும் ஓடினை; ஆனலை கண்டிலாய் உண்மைக கலையழகை; உண்மை அழகை நாட ஊர்தோறும், உணவின்றி, ஓராடையோடும் உழன்றாய்.

இறுதியில் மாமல்லபுரம கடற்கரை கூவியழைத்தது நின்னை. இங்குள்ள சிற்பங்கள் யாவுமே நின் கருத்தைக கவர்நதன எனினும், வீசும் இவ்வெண்ணிலவிலே, அலை கள் அடிககொருதரம அடிபணியும என்னிடம் பூர்ண எழில் இருப்பதாக உவநது நிற்கின்றாய்!

மைந்தனே! எனது உருவமும் கல்லால்செதுக்கப் பட்டது என்று உணர். என்னையும் ஆக்கியவன் உன் போன்ற ஒரு மனிதனே. யான் யானுகத்தோன்றவில்லை. கல்லாக இருந்தேன் – கலையுருவாக ஆக்கினுன் ஒருவன். கரடு முரடாக இருந்தேன் – கவினுறச்செய்தான் ஒரு வன். யானும திரிபு உள்ள பொருளே. ஆனல் திரிபில் லாத – புடைபெயர்ச்சியில்லாத ஒரு முற்றிய எழில் உண்டு என்று உணர். அதுவே உலகுடையாளின் உயிர் ஓவியம்.

இராமகிருஷ்ண பரமகம்சரும், விவேகானந்தரும் இதயத்திலே அழகுருவாகக் கண்டார்களே, அவ்வெழில் உருவம். அபிராமிபட்டர் அகககண்ணால் கண்டாரே அம் முற்றும் எழில் உடையாள். "ஓம் பராசக்தி ஓம் பராசகதி" என்ற நிறைமொழியைப் பாரதியின் வாழ்விலே அருள்வீரமாகக குழைத்தீந்ததே, அவ்வெழில் உடையாள்.

அகந்தைக கிழங்கை அகழ்ந்தெடுத்த அடியார்களது உள்ளமாம் அருட்புலத்தில் வளர் பசுங்கொடி; பெருந்தேன் இறைகரும நறைக்கூந்தற்பிடி; ஞானப் பெருக்கு; ஒளிவளர் விளக்கு; உலப்பிலாவொன்று; அளிபவர் உள்ளத்து ஆனந்தக்கனி; உலகைக் கடந்த கண்ணுதல் உள்ளததே தேட்டமுறத் தீட்டிய உயிரோவியம; வித்தின்றி உலகெலாம் ஈனுகின்ற எழிலதாய்; அவளது அழகை-எழிலை அள்ளியள்ளிப் பருகவேண்டும். ஏனெனில் அவளது எழில முற்றிய எழில், உண்மை எழில்; மன்னுவுலகத்து மன்னிய எழில் அவளது எழிலை உபாசிப்பாயாக!

என்னை மற! இவ்வுலகை மற! தலைவிதாளே தலைப்படு! வாழக!"

அன்னை மறைந்தாள்; கண்விழித்துக்கொண்டான் அவன்.

உள்ளத்தே எழுந்த போராட்டத்தை-எண்ணத்தே தவழ்ந்த காட்சியை மறந்தான்; சிலையைநோககினான்; பழையபடியே அருளவடியும் கண்கள! களிதுளுமபும் பார்வை! ஆனந்தம பொங்கும் குறுமுறுவல்! ஆனால் அவனது கருத்து இப்போது அதில் லயிக்கவில்லை.

அகிலமுழுதுடையாளின் பேரழகே அவன் உள்ளத்து முநதிநின்றது; அவளது திருமேனிப் பிரகாச வெள்ளொளியே கருத்தில் ஒளிவிட்டது; அவனது கண்கள் ஒரே வெளிச்சமாக-நிலவில் தோன்றிய கடலலை

கலை நோக்கின; அக்கடலினது வெண்மை அவனுக்கு அன்னையின் வடிவை உள்ளத்தில் தீட்டியது. ஆம்! இதோ இவ்வெண்மைக் கடலில் அன்னை அமைந்து கிடக்கிறாள்; அவளது வெள்ளொளி விரவிய கடலில், 'இதோ! அன்னாய் என்னை ஆண்டுகொள! உன்பேரெழிலை உபாசிக்கும் சிறியேனை உய்யக்கொண்டருள்.'

இவை அவனது வாயினின்று உதிர்ந்த இறுதிச் சொற்கள். வமமெனப் பாய்ந்துவிட்டான் வெணதிரைக் கடலில். மறிந்துவிழும வெண்திரைகள் இளைஞனது சடலத்தை அணைத்துக்கொண்டன. வெண்மதி இதனைக் காண சகிக்காதவன்போல, முகிலுள் ஓடி ஒளிந்து கொண்டான். அமைதி அன்னை நங்கைச் சிலையின் மருங்கிலே தவழ்ந்தாள். "நீராரும் கடலுடுத்த நில மடந்தை" இளைஞனை அழைத்துக்கொண்டாள!

குடியரசுதினக் கொண்டாட்டப் பாராட்டுப்பா

[பிரமஸ்ரீ A. சௌந்தரராஜ ஐயங்கார், சமுக்காணிமுட்டம்]

குடியரசு தினமதில் குருஞான சம்பந்தர்
குலவுசீர்ச சாலை யதிபன
அடிமுரசு பறையிடைத் தூரியம் முழங்கிடத்
தூமலர்கள் தூவ வானில
கொடிவிரிய வானிடைக் கூடிநின் றேற்றுவன்
குருசிவரு பத்தி ஜந்தாம
படிவளரு பங்கயக் கணணினன் பாலர்கள்
பரிசுபெற நின்று மகிழ்வன்.

ஆனந்த நாளிதில் ஆலயம பலவினுள்
அரியநற பூசை யாற்றிச்
சீலநல் தேசிகன சிறப்புடன வழிபாடு
திருவுளங் கொணடு செய்வன்
மானவெண குடைநீழல் மன்னுசீர நேருவின்
மனுநீதி யாட்சி ஓங்கச்
சீலமாம செந்தமிழ்ச சொக்கனை ஏத்துவன்
சீர்தருமை மாட அதிபன.

யார் குற்றவாளி?

[பண்டிதப்புலவர், திரு. த. வடிவேலு, யாழ்ப்பாணம்.]

அன்பர் திருஞானசம்பந்தன் அவர்கள் எழுப்பிய வாதம், இன்று வள்ளுவன் இல்லையே! அவனைக் குற்றவாளியாக்கிவிட்டு யாம் அறிஞர் நிலையில் சோந்து விடுவோம் என்று சொல்லுவது போன்றுள்ளது.

வாதிடுவதால் நாம் அறிந்துகொள்வது ஒன்று; மற்றையோரையும் தவறுசெய்யாது தடுப்பது ஒன்று ஆகிய இருநன்மைகள் ஏற்படுகின்றன.

இன்று வள்ளுவனோ பரிமேலழகனோ நம்முன் இல்லை என எண்ணுவது அறிவீனமே. அரும் பெரும் செயலாற்றிய ஒருவன் உடல் அழிந்துவிடினும் அச்செயலுடன் அவன் உயிர்பெற்று என்றும் விளங்குவான். உலகினர் போற்றும் அரும் பெரும் அறநூலதந்த வள்ளுவனோ அன்றேல் அவ்வறவுரைக்கு உரை காணும் தகுதிபெற்ற பரிமேலழகனோ நம்முன் என்றும் விளங்குகிறார்கள் என்பதில் ஐயமே இல்லை.

நீவிர்செய்த உரை தவறு என யாம்கூற முற்படவே அவன் வள்ளுவனே குற்றவாளியெனக் கூறத் தலைப்படுகின்றான். 'யான் கூறியதில ஏற்ற இடம் பலவாகவும் ஏலா இடம் சிலவாகவும் இருக்கிறது' எனக் கூறவே எனக்கு மகிழ்ச்சியேற்படுகின்றது. ஏனென்றால் அன்பர் சிலஇடங்களை விளங்காமையால் ஏலாதன எனக்கொண்டார். எனவே அவரறியாமையினை நீக்கல் நமது கடமையாகின்றது.

நிலையாமைகூறவந்த வள்ளுவர் நேற்றிருந்தவன் இன்றில்லாது போகின்றான். உறங்கியவன் விழித்துக்கொள்ளுகிறான். அவ்வாறே இறந்தவன உடன்பிறந்து விடுகின்றான் என்று கூறினாரே தவிர நிலையாமையில் ஒருநாள் அரைநாள் அளவு கூறவந்தாரல்லர்.

பலகாலம் உடம்புடன்கூடியிருந்த உயிர் பிரிவதற்கு முட்டையுடன் கூடியிருந்த புள் வெளிப்படுவதை உவமையாக எடுத்தாண்டமை மிகப் பொருத்தமேயாகும். ஒரு சிறு குழந்தை தானும் பிறக்குமுன்பே உடம்பும் உயிரும் கூடியிருந்து பிறந்த

பின்பு இறக்கமுடியும் அன்றி உயிர் உடலில் வருதலும் நீங்கலும் ஒன்றாக நிகழும் வழக்காறு இவ்வுலகில் இல்லை.

முட்டை பயனற்று அழிய புள்வெளிப்படல் உடம்பு பயனற் றழிய உயிர் வெளிப்படலுக்கு உவமையாக எடுத்தாண்டமையே பொருந்துவதாம்.

புள் பறக்கும்வரை இறக்கை முளைக்கவேண்டுமே உடன் பறக்குமா என்று அன்பர்கேட்கிறார். இங்கு புளவெளிப்பட்டது என்பதையே கொள்ளல்வேண்டும். முட்டை பருவமவந்து வெடித்ததும் புள்வெளிப்படுவிடுதலே உலகவழக்காகும்.

மேலும் வள்ளுவர் குடம்பைதனித்தொழிய எனக் கூறினார் எனவே குடம்பை பின் பயன்படும்நிலையில் இல்லாமலாகப் புள்பறத்தலையே கருதினார். அன்றியும் புள்பறந்தபின்பு முட்டை உபயோகமற்று அழிந்துவிடும். ஆனால் கூடோ உபயோகமாகும் தன்மையிலேயே இருக்கும். அவ்விதம் கூட்டினையே உவமை கொள்வோமானால் அவ்வுடம்பும் பின்பு வேறோர் உயிருக்காவது உபயோகமாகும்தன்மையிலிருத்தல்வேண்டும். உயிர் நீங்கிய உடம்பு உபயோகமாதல் இல்லை, எனவே அதற்கு உவமையாகக் குஞ்சு வெளிப்பட்ட முட்டையையே கொள்ளல்வேண்டும்.

நிலையாமை அதிகாரம் கூறவந்த வள்ளுவன் கால அளவு கூறவந்தாரல்லர். எப்பொழுதும் இறப்பு நேரிடுமெனக் கூறினார். இறந்தபின் உடல் தானும் ஒன்றிற்கும் உபயோகமற்றதாகிவிடும் என்றார். அதற்கேற்ற உவமைதேடிய வள்ளுவன் முட்டையே தகுந்த உவமையென உணர்ந்து கூறினார். அதனையே யான் கூறினேன் என்கிறார் அழகியார்.

நிலையாமை கூறவந்த வள்ளுவன் நிலைக்கும் தன்மையுள்ள கூட்டை உவமைகூறினன் எனல் பொருத்தாககூற்றாகும். ஆழ்ந்து நோக்குமாற்றல் யாவரும் பெறுதல் அரிதாகும். அதற்கு நம்மை நாமே நோதல்வேண்டும். பரிமேலழகன் கூறியது பொருந்தாக கூற்றானல் வள்ளுவன் உலகியலுக்குப் பொருந்தா உரை பகர்ந் தான் என்ற குற்றம் அவனையேசாரும். எனவே பரிமேலழகன் குற்றவாளியானால் வள்ளுவனே குற்றவாளியாகின்றான். நம்மீது உள்ள குற்றத்தை அறிஞர்மீது சார்த்த முற்படல் ஒவ்வாச் செயலாகும்.

திருவாவடுதுறை மகாசந்நிதானம் அவர்களின்
தக்ஷிணயாத்திரை

தண் தமிழ்நாட்டுத் தனிப்பெரு ஆதீனங்களுள் ஒன்று திருவாவடுதுறை ஆதீனம். அதில் எழுந்தருளி அருட்செங்கோலோச்சும் மகா சந்நிதானங்கள் பெரும்பாலும் திருநெல்வேலி யாத்திரை செய்யாமலிருப்பதில்லை என்று ஆதீன வரலாறு கூறும். அதற்கு இணங்கவே இப்போது மகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது யாத்திரையை 7—9—50 குருவாரம் மாலை தொடங்கினார்கள். திருச்சி ஜில்லா மதுரை ஜில்லாக்கள் வழியாக எழுந்தருளினார்கள். சிவதலங்கள் தோறும் அபிஷேக ஆராதனை, தெரிசனம் அன்பர்கட்குக் காட்சி ஆங்காங்கும் திருமுறைப் பாராயணம். அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு இவைகளுடன் தலப்பதிகங்களை வரலாற்றுடன் அச்சிட்டு வழங்குதல். திருவையாற்றிலும், திருச்சியிலும் தருமபுர ஆதீனத்துப் பிரதிநிதிகளும் வரவேற்று உபசரித்துச் சிறப்பித்தார்கள். இதற்குமுன் இருந்த மகா சந்நிதானங்களில் ஒன்று திருநெல்வேலிக்கு எழுந்தருளிய போது பல அன்பர்கள் விரும்பியபடி "வானங்காள் பெய்க மழை" என்ற மகுடம் கொண்ட திருப்பாடலை அருளி மழைபெய்யச் செய்த வரலாறு அன்பர்கள் கேட்டிருப்பர். அதனை வலியுறுத்தற்பொருட்டு 11—10—50-ல் மகாசந்நிதானம் அவர்கள் நெல்லைக்கு எழுந்தருளியபோது மழை பெய்ததாம்.

சந்நிதானம் எழுந்தருளியவிசேடத்தால் இடம் இடங்கள் தோறும் சொற்பொழிவு 21—10—50-ல் தமிழ் மாநாடும், 23—10—50-ல் சைவ மாநாடும் கூட்டப் பெற்றன. தமிழ் மாநாடு திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில், சைவ மாநாடு திரு. C. K. சுப்ரமணிய முதலியார் அவர்கள் தலைமையில். எப்படி மாநாட்டிற்கு ஏற்ற தலைவர்கள் அமைந்தார்களோ அப்படியேதான் சொற்பொழிவாளர்களும். தமிழும் சைவமும் தழைத்தனி தோங்கிறது. இவை சிறப்பு நிகழ்ச்சி பொதுவாகவே ஆங்காங்குள்ள கழகம், சபை, சங்கம், நிலையம், பாடசாலை, என்ற பெயருடன் எவை எவை இருக்கின்றனவோ அவைகள் யாவும் வரவேற்புப் பாத்திரம் வாசித்தளிக்கத் தவறியதில்லை. அரசியல் பொது ஸ்தாபனங்களும் அப்படியே. அது போலவே மகா சந்நிதானம் அவர்களும் ஆயிரம், பதினாயிரமாக வெண் பொற்காசுகளை வழங்கி ஆசீர்வதிப்பதிலும் தயங்கியது

இல்லை. சில கழகங்கள் வரவேற்பிலேயே நிதி உதவவேண்டும் என்று குறிப்பிட்டுவிடும். இவ்வரவேற்புகளுக்கெல்லாம் நமது தொண்டன் ஆசிரியர் திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் ஆதீனச் சார்பில் மறுமொழி கூறி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

சுசீந்திரத்தில் 5-12-50-ல் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் மகா சந்நிதானம் அவர்கள் தலைமையிலேயே சமய மாநாடு நடைபெற்றது. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும் கலந்து கொண்டு உபசரிக்கப் பெற்றார்கள். 6—12—50-ல் பிற்பகல் 4-மணிக்கு நாகர்கோயில் ஸ்ரீ சித்திரை இந்துமத நூல் நிலையத்தில் தென் திருவிதாங்கூர் திருநெறித் தொண்டர் கழகத்தின் 22-வது ஆண்டு நிறைவுவிழாவிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அருள்தலைமை அமர்ந்தருளி ஆசியளித்தார்கள்.

நெல்லை பேட்டை இந்து கல்லூரிக் கட்டிடத்திற்கும், தூத்துக்குடி சங்கரராமேசுவரர் கோயில் கோபுரத் திருப்பணிக்கும் மகா சந்நிதானம் அவர்கள் பெரும்பொருளுதவி செய்ததோடு கல்நாட்டு விழாவும் தமது திருக்கரத்தாலே நடத்தி அருளியது தமிழ் நாட்டுத் தனிப்பெரும் பேறாகும். இது தமிழ் வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் மகா சந்நிதானம் அவர்கள் செய்த தொடக்க விழா என்பதை அன்பர்கள் உளங்கொண்டு சிந்தித்து மகிழவேண்டும். ஆகவே இவ் யாத்திரை தமிழ் வளர்ச்சிக்குச் செய்த யாத்திரை, சமய வளர்ச்சிக்குச்செய்த யாத்திரை என்று கூறுதலும் ஏற்புடைத்தே.

இந்த யாத்திரையில் அன்பர்கள் செய்துவைத்த பட்டிணப் பிரவேசங்களும் அளப்பில. இவ்வாறு தமிழ்நாட்டிலே - தென் நாட்டிலே ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கி அன்பர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து ஆட்கொண்ட மகா சந்நிதானம் அவர்களின் அளப்பருங்கருணைக்குக் கைம்மாறு உண்டோ!

7-9-50-மாலை தொடங்கிய இவ் யாத்திரையை இனிதாக நிறைவேற்றிக்கொண்டு, தம் ஆதீனத்துக்குச் சொந்தமானதும், ஆயிரம் பூக்கொண்டு அரனடி பரவிய அரிக்குச் சக்கரம் அருளி அருள் பாலித்த சிறப்புற்றதுமான திருவீழிமிழலைக்கு 7-2-51 மாலை ஸ்ரீ ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியான திருவருட் சிறப்பினை அன்பர்கள் குருவருள் துணைகொண்டு கூர்ந்து நோக்கி இன்புறுவார்களாக.

மூர்த்தி யேதுவாய்ப் பகவதி யாமுதற் றேவி
சித்தத் தாலுணர் வரியமா விரதையே செருத்த
கொத்துப் போன்றவிந் திரியராய்ப் பிரமத்தைக் கூடும்
முத்திக் காமராந் தோடமின் முனிவர்க டம்மால்.

கு - ரை:- ஏது - காரணம், பகவதி - ஐஸ்வரிய ரூபமாயிருப்பவள், இவளே ஆதிசகதி "ஸாசர்வா சண்டிகா துர்கா பத்ரா பகவதீர்யதே" எனத் தேவிமகாத்மிய ரகசியத்தில் பகவதி என்னும ஆதிசக்தியின் பெயர் கூறபபட்டிருத்தல் காண்க. மாவிரதை - மகாவிரதங்களையுடையவள். தந்திர நூல்கள் கூறும் வீராசாரம போன்ற கடுமையான விரதத்திற்கே மகாவிரதம என்று பெயர். அஹிம்சையெனக் கூறுதலும உண்டு.

செருத்த - அடக்கபபட்டதும், கொத்துப் போன்ற - பூங் கொத்துப்போலத் தொகுதியானதுமான, இநதிரியர் - ஐம் பொறிகளையுடையவர். "பஞ்சமலக்கொத்து" என்பர் உமாபதி சிவம். பிரமத்தைக்கூடும முத்திக்காமர் ஆமதோடம இல்முனிவர் - பிரமசாரத்தையடைநதுள்ள வீடு பேற்றில் விருப்பமுடைய காம முதலிய அறுவகைக் குற்றங்களும் இல்லாத முனிவர்கள்.

வி - ரை:- இசசெயயுள் குளகம். பிரமத்தைக்கூடும்...... முனிவர் என்றதனால் சீவன்முத்தர்கள் என்பது தெரிந்தோம். 10

பயிலு மேன்மைசேர் வித்தையாய்ச் சிற்பர புருடர்க
கியலு நன்மனை யாகியே யிருந்தநின் சரணம்
துயரு ருவகை தொழுதனந் துலங்குசா மத்தோ
டயலி ருக்கிய சுசாதிமூ லத்தொனி யம்மே.

கு - ரை:- (முனிவர்களால்) பயிலும - நாள்தோறும் அப்பியாசிக்கபபடுகின்ற. வித்தையாய் - ஸ்ரீ வித்தையின் உருவமாகியும், சித் - அறிவுவடிமாகிய. பரபுருடற்கு - பரமசிவனுக்கு இயலும நன்மனை - வாய்த்திருககின்ற நலல மனைவி. "சதாசிவ குடும்பி நீ" "பரப்ரஹ்ம மகிஷீ" எனவழங்கும அம்மனுடைய நாமங்கள் ஈண்டு அறிதற்குரியன.

சரணம் - திருவடிகளை. துயர உறுவகை - துக்கங்கள் அணுகாமலிருக்கும்பொருட்டு. சாமம் - சாமவேதம். அயல் - அதன் (சமீபம) பக்கமாகவுள்ள. இருக்குயசுசு - இருக்குவேதமும் யசுர வேதமும ஆகிய மூன்று வேதங்களுக்கும். ஆதிமூலம் தொனி - ஆதிகாரணமான சப்தரூபமாக இருக்கின்ற. அம்மே - தாயே.

வி - ரை:- "முத்திக் காமராம் தோடம் இல் முனிவர்கள் தம்மால் பயிலும் மேன்மைசேர் வித்தை" யென்றதனுல் ஸ்ரீ வித்தை, வீடுபேற்றில் விருப்பமுடைய மேலோர்களாலே உபாசனை செய்யத்தகுந்தது; கேவலம் சிற்றின்பவழிகளில் உபயோகிப்பது வீணனதே. ஆணுருவமான தெய்வத்தை யுடையதற்கு மந்திரமென்றும, பெண்ணுருவமான தெய்வத்தை யுடையதற்கு ஸ்ரீவித்தையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

தேவி வித்தையுருவமாய் விளங்குவதை "தேவி வித்தை யுருவான திகழ் நின் கமலசரண் போற்றி" என்றும் தேவி சகல வித்தைகளும திகழ் நாரியுரு நீயானாய், என்றும இந்நூலிற் சொல்லப்பட்டிருப்பதனாலுமுணர்க. ஸ்ரீவித்தையானது மந்திரம யந்திரம பாவனை உபாசனை என்னும் நான்கு அங்கங்களை உடையது.

வேதங்களில் அதர்வணம் ஒழிந்த ஏனை மூன்று வேதங்களுமே சிறந்தனவாம. அந்தமூன்று வேதங்களிலும தேவியின் வடிவமாயுள்ள நாதரூபமான ஓங்காரசப்தம் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது. ஆதலினலே, 'சாமத்தோடு அயலிருக்கு யசுசாதி மூலத்தொனியம்மே' எனப்பெற்றது. 11

ஏது முத்தொழிற் காகிய துர்க்கையெவ் வுயிர்க்கும்
ஓது அர்க்கமாம் பவக்கடல் கடத்து மொண்புணையே
மேதை யாகிய தந்திர போதையே விண்ணும
தீதின் முத்தியு மீயுநின் றிருவடி தொழுதாம்.

கு-ரை:- முத்தொழிலுக்கு ஏதுவாயுள்ளவை முக்குணங்களாம "அன்னோன் மாயை வெள்ளைசிவப் பமருங் கறுப்பினிறம வாய்த்து, மன்னு வுறைசாத் துவிகமிரா சதந்தா மதமாங் குணமருவித, துன்னு வுலகம் படைக்குமா லொருவ னதனாற றுவக் குறுவ, னொர்நாளினுமற றதைக்கடந்தேயிலங்கி யொருவ னுறைகுவனால்" என்னும வாயுசங்கிதை ஈண்டு உணரத்தக்கது.

முக்குணங்களையுமுடையவள் துர்க்கையாம். துர்க்கம ஆம - தாண்டுவதற்கு முடியாததாகிய. பவம் கடல் - பிறவிக்கடலை, கடத்தும - தாண்டச் செய்கின்ற, ஒண்புணை - சிறந்த தெப்பமாயுள்ளவளே. மேதை - சரசுவதி, தந்திரபோதை - எல்லா நூல்களினுமுள்ள சாரமாகிய ஞானத்தையுணர்ந்தவள். விண்-சுவர்க்க முதலாகிய போகவுலகங்கள். முத்தி - வீடு.

வி-ரை:- துர்க்கை விளிவேற்றுமை இயல்பாயிற்று. இந்நூலின் ஆதிமூலதேவதை துர்க்கையே. இவளே சண்டிகை. இவளுக்கு மகாலட்சுமி என்று பெயர். இவள் தாமதகுணப் பிரதானையாய் மகாகாளி எனனும பெயருடன் மதுகைடபர்களையும, இராசதகுணபபிரதானையாய் மகாலட்சுமி என்னும பெயருடன் மகிடாசுரனையும, சத்துவகுணப்பிரதானையாகிய மகா சரசுவதி என்னும பெயருடன் சுமபநிசுமபர்களையும் அழித்துத் தேவர் முனிவராதியோர் துன்பம துடைத்தவள்.

மகாலட்சுமியின் அவதாரமானது ஆதிசக்தியாகிய சண்டிகையின் குணம உருவம ஆகியவறறையுடையதேயாம். மகாலட்சுமி இராசதகுணப்பிரதானை என்று சொல்லப்படினும அவள் முக்குணமும உடையவள். இவள எல்லாத் தேவர்களுடைய சக்திகளையும் பெற்றுப் பொன்னிறமேனியுடையவளாய் விளங்குகிறாள். துர்க்கையும் மகாலட்சுமியும நாமரூபத்தால் வேறாகச சொல்லப்படினும உணமையில் ஒன்றேதான். மகிடனை அழித்த மகாலட்சுமியைப் பத்துத்திருக்கரங்களுடைய துர்க்கையாகத தற்காலத்தில் நாம வழிபாடு செய்கின்றோம். மகாலட்சுமியைப பூசிப்பவன் எல்லாவுலகங்களுககும் தலைவனாகின்றானெனத் தேவிமகாத்மியரகசிய நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவளே "மஹிஷாசுரநிர்வீர்ய நிக்ரஹாயை நமோ நம" என்று தேவர்களால் துதிக்கப் பெற்றவள். துர்க்கை ஆதிசக்தி. மேதை பிரம சக்தி. 12

சீத ரன்னுரம் திகழுமா லயமெனச் சேர்ந்தோய்
ஓது சங்கர பன்னியாங் கௌரியுன் னெழிலார்
பாத பங்கயந் தொழுதனம பத்தரெம் மிடரை
ஆதி நாயகி யிககண மகற்றினே யம்மே.

கு-ரை:- சீதரன் - திருமால். உரம் - மார்பு. சேர்ந்தோய் - சேர்ந்துள்ளவளே; விஷ்ணுசக்தி. பன்னி - மனைவி. கௌரி - கௌரவர்ணமுடையவள்; சிவசக்தி. 13

ஒளிரு நல்லசங் கையொடு பரமையு மோங்கி
மிளிரும் வேதத்தின் மும்மையு மணுககண்மே வுதற்கு
விளையு நற்பயிர் விருத்தியா திகளுநீ விணோ
டுளையு நற்புவி யாதனே யொழிப்பவ ளீயே.

கு-ரை:- அசங்கை - ஒன்றிலும சேராதவள். பரமை - மேலானவள். வேதத்தின் மும்மை - இருக்கு யசுர் சாமம என்ற மூன்று வேதங்களின் உருவமாயிருப்பவள். அணுக்கள்-உயிர்கள். மேவுதற்கு - வாழ்வதறகு வேணடிய. பயிா விருத்தி ஆதிகள் - உழவு முதலிய விருததி யுருவங்கள். ஆதிகள் என்றமையால் வாணிகம பசுக்காத்தல முதலியனவுமகொள்க. விண் - தேவர்கள்; இடவாகுபெயர். புவி-பூமியிலுள்ளவர்கள். யாதனே-துன்பங்கள்.

வி-ரை:- தேவி மூன்று வேதங்களாகவும பிராணிகளின் சீவனரூபமாகவுமிருப்பவள். தேவி மும்மறையுருவினளாதலின், லலி. நா. 672. "த்ரயீ" என்னும் பெயர் அமமனுக்கு வழங்குகின்றது. அதர்வண வேதத்தில் மாரணம உச்சாடனம தம்பனம முதலியவற்றிறகுரிய மநதிரங்களே மிகுதியும்அடங்கியிருத்தலின் பாவமே மிகுதிபபட்டிருக்கினற இக்காலத்தில அசத்காரிய விஷயங்களுக்கும உபயோகப்படுத்துவாராதலின் தீாக்க தரிசிகள் அதர்வண வேதத்தை யொழித்து மூன்று வேதங்களையே

கொண்டனர் என்பர், தேவிபாகவதத்தில் "வேதத் திரயங்களுக்கு பிரமணமாயிருப்பவளே" என்றும், அமாத்தில "இருக்கு சாமம யசுசு" என்று வேதங்கள் பெயர்பெறுமென்றும கூறியிருப்பது ராண்டு அறிதற்குரியது. 14

தோற்று முக்குணி யாகியுந் தோடங்க டம்மால்
ஆற்றல் சேர்விட யஙகளி லணுகிலா யம்மே
மாற்ற லார்தமை யமரினி லழித்துவிண் மன்ன
ஏற்றி யெமபய மகற்றுநின் பதமிறைஞ் சினமால்.

கு-ரை:- முக்குணியாகியும் - சத்துவம் இரசசு தமசு என்னும் முக்குணங்களையுடையவளாயிருநதும், தோடங்கள் தமமால் - அக்குணங்களினல் ஏற்படுன்ற இராகாதி தோஷங்களினுல், ஆற்றல் - மனதையிழுக்கும் வலிமை நிறைநத, விடயங்களில் - ஐம்புல விஷயங்களில். அணுகிலாய் - சேராதவளே; விண்மன்ன - வானுலகத்தில் நிலைபெற வாழுமபடி, ஏற்றி - எங்களைச குடியேற்றி, பயம அகறறு - பயங்களைப்போக்கிய, நின் பதம் - உன்னுடைய திருவடிகளை. இறைஞ்சினம - வணங்கிளேம.

வி-ரை:- அன்பாகளுக்கு அருளைவழங்குவதில் தேவியின் திருவடிகள் சிறந்தனவாமாதலின் "பயமகறறு நின்பதம" எனப பெற்றதென்க. தோற்றும என்பதற்கு முறையே வெண்மை, செமமை, கருமையாகத் தோன்றுகின்ற எனபபொருள்கொளக. இதனல் தேவி தமக்கு அருள்செய்ததை எணணித் தேவர்கள் தமது வணக்கம தெரிவித்தனர். 15

புன்ன கைபுரிந் தமலமாய்ப் பூரண மதிய
நன்ன யம்பெறுங் கனகவுத் தமநகை வதன
முன்னர் நின்றும்பின் கறுவிய மகிடனு முசுடன்
அன்னை யெற்றின னன்னபோ தானனங குபிதம்.

கு-ரை:- அனனை - தேவியே அமலம ஆய் - குற்றமற்றதாய, பூரணமதியம - கலைமுழுதும் நிரம்பபபெறற சந்திரனைப் போல, நல் நயம் பெறு - நல்ல மகிழ்சசியைப் பெறச்செய்வதும்,

உத்தமம் - மேலாகிய, கனகம் நகை - பொன்னைப்போல ஒளியினால் விளங்குவதுமாகிய, வதனம் - உன்முகத்தை, முன்னர் நின்றும் - எதிரில்நின்றுபார்த்தும், மகிடன்ஆம்முசுடன் - மகிடாசுரனாகிய கீழோன், உற்றினன் - உன்னைஅடித்தான், மகிழ்ச்சி தருவதும் ஒளிபொருந்தியதுமாகியதேவியின்முகத்தைப்பார்த்து மகிடன் மகிழ்ச்சியடையவேண்டியது நியாயமாயிருக்க, அங்ஙனம் செய்யாமல் அடித்தான் என்பது ஆச்சரியம். அன்னபோது - அவன் உன்னை அடித்த அப்பொழுது, ஆனனம் - உன் முகத்தில் உண்டாகிய. குபிதம் - கோபத்தையும். இச்செய்யுள் அடுத்த செய்யுளில் முடிகிறது. 16

பிருகு டிக்கரா ளச்சசாங் கத்தொளிப் பிழம்பு
மூருட னோக்கியு முயிரினை விட்டிலன் முதல்வி
யிருத யந்தனி லோர்ந்திடின் மிகவியப் பிவண்டா
னுருவு ளாரெவர் குபிதவந் தகற்கண்டு முய்ந்தார்.

கு-ரை:- பிருகுடி - புருவங்களின் நெறிப்பினால் உண்டாகிய. கராளம் - பயங்கரத்தையும். சசாங்கத்து - உதயமான சந்திர பிம்பம் போன்ற உன்முகத்தின், ஒளிபிழம்பு - சிவந்த ஒளியின் திரட்சியையும், மூருடன் - மூடனாகிய மகிடன், உருவு உளார் - சரீரவடிவமுடையவர்களில். குபிதம் அந்தகன் கண்டும் - கோபத்தோடுகூடிய யமனைப் பார்த்தும், உய்ந்தார் எவர் - பிழைத்தவர் யாவர்? ஒருவருமில்லை. தேவியின் கோபமுடைய முகத்தைப் பார்த்த மகிடன் செத்திருத்தல் வேண்டும்; அவன் சாகாமல் இருந்தது மிகவும் வியப்பு என்றபடியாம். இதனால் மகிடனுடைய தீரம் விளங்குகிறது.

வி-ரை:- மகிடன் தேவியை அடித்தற்கு முன்பு, அமலமாய்ப் பூரணமதியம் போன்று மகிழ்ச்சி தருவதாயிருந்த தேவியின் முகமானது, மகிடன் தேவியை அடித்தபின்பு கோபத்தினால் பயங்கரமாகிய புருவவளைவினையும் சிவந்த ஒளியையும் உடையதாயிற்று ஆதலால் 'சசாங்கத் தொளிப்பிழம்பு' என்றார். சச அங்கம் - முயற்கறையை உடம்பிலுடையவன்; சந்திரன். 17

தேவி நீயரு ளெனுமுரை பயனில செப்பின்
ஆவி கட்கருள் புரியியல் புடையளா தலினன்
மேவு மெங்கட்குச் சுபமுற மேவலர் குலத்தைக்
கோப முற்றுநீ கொல்லுத லிதனினற் குறித்தாம்.

கு-ரை:- செப்பின் நீ ஆவிகட்கு அருள்புரி இயல்புடையள் ஆதலினல் தேவி நீயருள் எனும் உரைபயனில எனக் கூட்டுக. செப்பின் - சொல்லுமிடத்து, ஆவிகட்கு - எல்லா உயிர்களுக்கும். இயல்பு - சுபாவமான புத்தியை, அருள் எனும் உரை - எங்களுக்கு அருள் செய்வாய் என்னும் வார்த்தைகள், பயன் இல - வீணனவைகளே, நாம் வேண்டாமலிருக்கவும் தேவியே அறிந்து நமக்கு அருள் செய்வளெனக் குறித்தபடியாம்.

''நீகோபமுற்று மேவலர் குலத்தைக் கொல்லுதல் இதனினல் மேவும் எங்கட்குச் சுபம் உறக்குறித்தாம்'' எனக்கூட்டுக. கோபம் உற்று - நீ கோபமடைந்தால், உற்று வினையெச்சத்திரிபு. மேவலர் குலம் - பகைவராகிய அசுரர் கூட்டங்களை, கொல்லுதல் இதனினல் - கொல்லுதலாகிய இச்செயலினல், சுபம் உற - எங்களுக்கு நன்மைகள் உண்டாக அருள் புரியும்படி, குறித்தாம் - உன்னை நினைத்தோம். தேவி நீ கோபமடைந்தால் பகைவர்களை நாசஞ்செய்கின்ருய், ஆதலால் எங்கள் குறைகளை மன்னித்து எங்கள் குலங்களை விளங்குமாறு அருள்செய்து காப்பாற்ற வேண்டும் என்று குறித்தபடியாம். 18

தேவி தன்பெருங் கருணையா னன்மையுஞ் செறியுந்
தேவி தன்மிகு சினத்தினு னசமுஞ் சேரும்
ஏவ ரைக்குறித் தம்மைதன் னுளத்தினிற் கருணை
மேவு வாளவர் சம்மதர் சீர்த்தன மேலோர்.

கு-ரை:- செறியும் - பொருந்தும்; மேன்மேலும் உண்டாகும். ஏவரை குறித்து - யாரைக்கருதி. கருணைமேவுவாள் - கருணைவைக்கிருளோ, அவர் சம்மதர் - அவர்கள் சனங்களால் தக்கவரென்று மதிக்கப்படுகிருர்கள். சீர்தனம் மேலோர் - அவர்களே சிறப்பாகிய சம்பத்துக்களையுடைய மேலோராவார்கள். 19

நட்ட வர்க்குறு கீர்த்தியு மறமுத னான்கும்
பெட்ட சந்ததி மனைதொழுத் தன்னியர் பிறங்கும்
இட்ட புண்ணிய கன்மிகள் சுவர்க்கத்தி லிருப்பர்
எட்டு ணைத்துயர் பொருந்திடா முத்தியெய் துவரால்.

கு-ரை:- நட்டவர் - உன்னிடம அன்பு வைப்பவர்கள் கு - பூமியில், உறு - மிகுதி, அறமுதல் நான்கும் - அறம் பொருள் இன்பம வீடு என்ற புருஷார்த்தங்கள் நான்கினையும், பெட்ட சந்ததி - விருமபத்தகுந்த புத்திரர்களையும, மனை - நல்ல மனைவியையும, தொழு - அடிமையாட்களையுமுடைய, தன்னியா - புண்ணியசாலிகளாவார்கள். (தேவியினிடம அன்புடையவர்களே மேலும) இட்டம - (நாள்தோறும) பிரியத்துடனே, பிறங்கும் புண்ணியம் கன்மிகள் - விளங்குகின்ற புண்ணிய கருமங்களைச செய்பவர்களாய்; அப்புண்ணியப்பயனால் சுவர்க்கத்திலிருப்பவர் என்க, சுவர்க்கம - தேவாகள் வாழும பொன்னுலகம், சுவர்க்க போகம் துய்த்தபின்பு முத்தி எய்துவர்.

வி-ரை - நட்டவர் - தேவியினால் கருணைசெய்யப்பட்டவர். முன் சன்மததில் சமபாதித்த கருணையுடையவர் எனலுமாம். தேவியின் கருணையினாலே கீர்த்தி புருடார்த்தம ஆதியவற்றை மனிதர்கள் அடைகின்றார்கள். அவளுடைய அருளிருந்தால் தான் நற்கருமங்களைசசெய்து சுவர்க்கமோட்சங்களை அடைதல் கூடும் என்பது அறியத்தகுந்தது. 20

பீதன் மாருனை முன்னிடிற் பீதியை யடையா
ரோது மின்பினர் முன்னிடிற் சித்தந்து வுறுவார்
போத வுற்றிடு மிடிதுன்பம் பயங்களைப் போக்க
வேத மற்றமூ வுலகினி னினையொழித் தெவரே.

கு-ரை:- தேவியை நினைத்தலின் பயன் கூறுவது இச்செய்யுள். பீதன்மார் - அச்சமுற்றவர்கள், முன்னிடில் - உன்னை நினைத்தால், பீதியை - அச்சத்தை, இனபினர் - தன்னிலையில் இன்புற்றிருப்பவர்கள், சித்தமது உறுவர் - சித்தசுத்தியை அடைவார்கள், போத - மிகுதியாக, "போதவேமதத்தாள்" 3. அத் 22. செய். "போதவிளையாட விட்டவன்றன்," நளவெண்பா.

புடை - ஊர்ப்புடை இருந்தான். இவையெல்லாம் உருபு. தே, வகை என்பன திசைக்கூற்று. இது பொருள். திசை என்பது ஆகாயம்போல் வரையறைப்படாது சொல்லுவான் குறிப்பினவாய்நிற்றலின் வேறு பொருளென்று, நிலமென்புழி அடக்காது, கொண்டுபோந்து கூறினார்போலும். வடக்கண் வேங்கடம், தென்கட்குமரி எனவரும்.

முன் - தேர்முன் சென்றான். இடை - சான்றோரிடை இருந்தான். கடை - கோயிற்கடைச் சென்றான். தலை - தந்தைதலைச் சென்றான். வலம் - கைவலத் துள்ளது கொடுக்கும். இடம் - கையிடத்துப்பொருள் என வரும். பிறவும் என்றதனால், கிழவோள்தேத்து கிழவி மாட்டு என்றாற்போல்வன கொள்க.

ஏனை வேற்றுமைபோலப் பொருட்பாகுபாடு அன்றி உருபின்பாகுபாடு உண்மையின் அதனை விரித்தோதினார் எனக் கொள்க. ஓதின உருபுகளெல்லாவற்றினும் கண் எனும் உருபு சிறந்தமையின முன்வைத்தது என்பது.

மற்றும் புறம், அகம் எனபனபோலவன எல்லாம் பெயராய், ஆறாவதன் பொருண்மையாய் வருகின்றமையின் ஏழனுருபு ஆமாறு என்னையெனின், அகம் புறம் என்பன ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தும்வழி ஆறாவதாம்; அவ்வாறன்றிக் கண் என்பது போல இடம் என முழுதுணர்வு செல்லநின்றவழி ஏழாவதாம் எனக் கொள்க. இதுநோக்கிப்போலும் கண் கால் எனக் கண் என்பதனை இருகாலாவது கூறியது என்பது. இவ்வாறன்றிக் கண் என்பது ஓரிடத்தினை வரையறாது முழுவதும உணரநிற்கும உருபு எனவும், அல்லன ஓரிடப் பொருள் உணர்த்திநிற்கும் உருபு எனவும் கூறுவதோர் நயமுண்டுபோலும். (உ0, உக.)

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலும் தொகைவயிற் பிரிந்தே.* 84

என் - எனின், ஐ முதலிய ஆறுருபிற்கும் பொது வாய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வேற்றுமைச் சொல்லினது பொருளை விரித் துணர்த்துங்காலத்து, அவ்வேற்றுமைப் பொருள்கள் பெயராது ஈற்றின்கண்ணே நின்று நடக்கும், தொகை விடத்து நின்று என்றவாறு.

உ - ம்: மரம் குறைத்தான் என்பது மரத்தைக் குறைத்தான் என இறுதிககண் விரிந்து நின்றது. தாய் மூவர் என்பது தாயோடு மூவர் என விரிந்தது. பிறவும் அன்ன.

இது "கூறிய முறையின்"† என்றதனால் அடங் காதோ எனின் அஃது உருபுநிற்கும் இடம் கூறியது; அங்ஙனம் நின்ற உருபு விகாரப்பட்டு, தொக்குநின்று பின் விரியும்வழியும் பிறண்டு விரியாது முன்கூறிய அதனையே திரிபுபடுவழிக கூறியது எனககொள்க. (உஉ)

பல்லா றுகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப. 85

என் - எனின், உருபுநோககிவரும் சொற்களின் இலககணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பல நெறியாக அவ்வவ் வேற்றுமையின் பொருளோடு பொருந்தி ஒலிககும எவ்வகைப்பட்ட சொல்லும் வேற்றுமைபோலப் பிரியாது இறுதிக்கண் விரிந்து நிற்றற்குரிய என்றவாறு.

---

* இதனையும், அடுதத சூததிரததினையும் ஒன்றாகக கூறுவா சேனா வரையர் முதலாயினோர். † தொல் - சொல். சூ. 70.

விரித்தற்குரிய என்பது, முன்னின்ற அதிகாரத்தால் கொள்க. இனித் தொகுத்தலும் உரிய என்பது, ஒன்றெனமுடித்தல் என்பதனுல் கொள்க.

உ-ம்: படைக்கை என்பது படையினைப் பிடித்த கை என விரிந்தது. குதிரைத் தேர் என்பது குதிரையால் பூட்டப்பட்ட தேர் என விரிந்தது. பிறவும் அன்ன. ஆருவதற்குப் பொருள்விரிதல் இல்லை.

உருபுகள் தொகுத்தலும் விரிதலும் கூறியவழியே அவ்வுருபுநோக்கிவரும் சொற்கள் தொகுத்தலும் விரித்தலும் அடங்குமால் எனின், அவ்வுருபு தொக்குழித் தொக்கும், விரிந்துழி விரிந்தும் நிற்றல் ஒருதலையன்மையின், அதற்கும் வேறு கூறவேண்டும் என்பது.

மரம் குறைத்தான், குழையை உடையன்; உருபு தொக்குழித் தொகாதாயிற்று எனக் கொள்க. (உ௩)

வேற்றுமையியல் முற்றும்.

௬. வேற்றுமைமயங்கியல்

கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை. 86

என்பது சூத்திரம்.

இனி, இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உருபும் பொருளும் உடன் மயங்குதலும், ஒருவழி உருபே மயங்குதலும, ஒனறற்குரியதனோடு ஒன்று மயங்குதலும், இரண்டும் ஒதது மயஙகுதலும, ஒரு பொருணமை ஒனறறகே உரியதாகாது பலவற்றோடு மயங்குதலும், ஒன்றனது ஒருபொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றனது பல பொருளோடு ஒன்று மயங்குதலும, ஒன்றற்குரிமை பூண்டு எடுத்தோதின பொருள்வழி மயங்குதலும், ஓதாதபொருள்வழி மயங்குதலும், ஒன்று தன் மரபாய் மயங்குதலும், இலககண வழககுளவழி மயங்குதலும, இலக்கணமில்வழி மயங்குதலும், மயக்கவகை யான் மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடிந்து தொடர்ந்தடுககி மயங்குதலும், ஒன்றனோடு பொருண் முடியாது தொடர்ந்தடுககி மயங்குதலும், தொகையுள் மயங்குதலும், தொகையில மயங்குதலும், உருபு வேற்றுமையாய் மயங்குதலும், உருபும் உருபும மயங்குதலும், என்றின்னோரன்ன வேற்றுமை பல மயககங் கூறலின் வேற்றுமைமயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், கிறுத்த முறையானே இரண்டாவது, அதிகாரத்தானே கின்ற ஏழாவதனோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: கருமச்சார்ச்சியல்லாத சார்தல் என்னும் பொருணமைககு உரித்தாதலையுடைத்துக் கண் என்னும் வாய்பாட்டதாகிய ஏழாம் வேற்றுமை என்றவாறு.

உ-ம்: அரசரைச் சார்ந்தார், அரசர்கட் சார்ந்தார் எனவரும்.

கருமச்சார்ச்சிக்கண் அரசர்கண் சார்ந்தார் எனின், அரசர் இடமாக, சாரப்பட்டது பிறிதாவான் செல்லின் கருமமல்லாச் சார்பு என்று ஓதப்பட்டது. (க)

சினைநிலைக் கிளவிக் கையும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர். 87

என் - எனின், இதுவும அவ்விரண்டன் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: சினையாகிய நிலைமையையுடைய பொருண்மைக்கு இரண்டாவதும் ஏழாவதும் அதன் வினைககூறு நிலைமைககண் ஒத்த பொருள் என்று கூறுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: கணணைககுத்தினான், கண்ணின்கண் குத்தினான் எனவரும்.

சினைக்கண் இவ்விரண்டும் வரும என்றது என்னை, பிறவும வருமால எனின், முன் இடப்பொருட்கண்வரும் என்ற ஏழாவது, மற்றொருவேற்றுமையோடு தொடர்ந்து கூறும்வழிச் செயப்படுபொருட்கண் வருதலும் கண்டு அது கூறியவாறு எனக கொள்க. தொடர்ந்து கூறும் வழியாமாறு உணரச் சொலலுகின்றார். வினைநிலை என்றது இரண்டாவதற்கு ஓதிய வினை, வினைககுறிப்பு என உணர்க. (உ)

கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே. 88

என் - எனின், இதுவும் அவ்விரண்டன் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்கூறிய இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் கன்றல் என்னும் பொருண்மையும், செலவு என்னும் பொருண்மையும் பொருந்திவரும் அவ்வுருபுகளது வினை கூறுமிடத்து என்றவாறு.

உ-ம்: சூதினைக் கன்றினான், சூதின்கண் கன்றினான்; நெறியைச் சென்றான், நெறிக்கண் சென்றான் எனவரும். (௩)

முதல்சினை கிளவிக் கதுஎன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே. 89

என்-எனின், வேற்றுமைகண்ணதோர் சொல்லுதல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று. மேற்கூறிய சினைநிலைக்கிளவி என்பதற்குப் புறனடை எனினும் அமையும். முதற்பொருட்கும முதலோடு தொடர்ந்த சினைப்பொருட்கும் உருபுகள் வருமாமாறு கூறினாராம்.

இ-ள்: அது என் வேற்றுமை முதற்கண்வரின் அதன் சினைக்கு இரண்டாம் வேற்றுமை வரும் என்றவாறு.

உ-ம்: யானையது கோட்டைக் குறைத்தான்; சாத்தனது கண்ணைக குத்தினான் எனவரும். (௪)

முதன்முன் ஐவரின் கண்என் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப. 90

என்-எனின், இதற்கும் அக்கருத்து ஒக்கும்.

இ-ள்: முதற்கண்ணே இரண்டாம் வேற்றுமை வரின் ஏழாம் வேற்றுமை சினைககண்ணே வருதல் விளங்கிற்று என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உ-ம்: யானையைக் கோட்டின்கண் குறைத்தான், சாத்தனைக் கண்ணின்கண் குத்தினான் எனவரும்.

தெள்ளிது என்றதனால் சிறுபான்மை இரண்டாவது தானேயும் வரப்பெறும். அஃது யானையைக் கோட்டைக் குறைத்தான், சாத்தனைக் கண்ணைக் குத்தினான் எனக் கொள்க.

இவற்றுள் முதல் சினைப் பொருட்குக் கண்ணுருபினைத் தொடர்ந்து கூறுமவழி இரண்டாவததனோடு ஒப்பச் செய்யப்படுபொருட்கண் ஏழாவது வந்தவாறு கண்டு கொள்க.

மணியது நிறத்தைக் கெடுத்தான், மணியை நிறத்தைக கெடுத்தான்: இது பண்பு. தலைமகனது செலவை அழுங்குவித்தல், தலைமகனைச் செலவின்கண் அழுங்குவித்தல், தலைமகனைச் செலவை அழுங்குவித்தல் இது தொழில். பிறவும் அன்ன.

இவ்வாறு மூன்றுமூன்றுருபு வாராது, ஒரு பொருளது இரண்டாவதன் தொடர்ச்சிபற்றி இரண்டாவது தானே வருவனவும் கொள்க. உ-ம்; சாத்தனை நூலை ஓதுவித்தல. யாற்றை நீரை விலககினான் என்பனபோல்வன. பிறவும அன்ன. (௯)

முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே. 91

என் - எனின், முதல் சினை என்னும் பொருண்மை அதிகாரப்பட்டமை கண்டு அப்பொருளை ஆராய்தல் நுதலிற்று.

இ-ள்: முதல் என்றும் சினை என்றும் சொல்லப் படுகின்ற பொருள்கள் இது முதல் இது சினை எனத்

தம்மின் வேறுபட நில்லாது, ஒருவன் சொல்லும் காலத்து அவன் சொலலுப கருத்தினகண் இது முதல் இது சினை என வேறுபாடு உணரநிற்கும் என்றவாறு.

உ-ம்: கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிககண் குறைத்தான், கோட்டை நுனியைக குறைத்தான்; இது சினை முதலாய் வந்தவாறு.

படை யென்பதனை முதலாகப் பார்கரும்வழிப் படையினது யானை எனச் சினையேபோலே நிற்கும் என்பது. (௬)

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியன் மருங்கின் மரீஇய மரபே. 92

என் - எனின், மேலதன் முடிபு முடிதலுடையது பிறிதும் உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று

இ - ள்: திரட்சி என்னும் பொருளினை யுணர நின்ற பெயர்களும் மேற்கூறிய சினைமுதல்களது இயல் பில் அவை கோடற்குக காரணம் என்னை எனின் முற் காலத்து நடந்த கூற்றேதுவாகப் பிற்காலத்து நடந்து மருவின்முறைமையுடையன அவையாகலான் என்ற வாறு.

ஆயியல் திரியா என்றது மேல, சினைமுதலாய் முதல் சினையாய் வந்தவாறு போலப் பிண்டமே பொருளாய் அப்பொருளே பிண்டமாய் வருமென்றவாறு. அன்றி பொருணிலைமை சொல்லுவான் குறிப்பினவாறுயின் அவ்வாறு போலப் பொருளின் வேறு பிண்டம் என்ப தொன்றுளதாகல், அச்சொல்லுவான் குறிப்பின் பாலது என்றவாறு.

சென்னையில் பெரியபுராண விரிவுரை

சென்னை இறைபணி மன்றத்தின் சார்பில், சென்னை பூக்கடை ஸ்ரீ மல்லீசுவரர் ஆலய அநுபூதி மண்டபத்தில் 7—1—51 தொடங்கி ஞாயிறுதோறும் மாலை 6-மணி முதல் 8 மணிவரை தொடர்ச்சியாக திரு. இளவழகனார் அவர்களைக்கொண்டு பெரியபுராண விரிவுரை நிகழ்த்தப்பெறுகின்றது. அன்பர்கள் சென்று தெய்வமணக்கும் சேக்கிழார் திருப்பாடல்களின் உண்மைப்பொருள் உணர்ந்து பயன் பெறலாம்.

மாயூரத்தில் மாநாடு

சென்றமாதம் திருவிடைமருதூரில் நடைபெற்றதுபோல இம் மாதத்திலும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஆதரவின்கீழ் 13-1-51 சனிக்கிழமை மாயூரம் முனிசிபல்ஹைஸ்கூலில் மாநாடு நடைபெற்றது. தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆணைப்படி ஆதீனத்திலிருந்து ஆதீனப்புலவர், திரு. ச. தண்டபாணி தேசிகர், ஆதீனப் பாடசாலைத் தேவார ஆசிரியர், திரு. R. வேலாயுத ஓதுவார் ஆகியோர்கள் சென்ற மாநாட்டில் கலந்துகொண்டு பணிபுரிந்தது போலவே இதிலும் கலந்துகொண்டு சொற்பணிபுரிந்தார்கள். அன்று காலையில் நடைபெற்ற ஊர்வலத்திற்கும் ஆதீனத்திலிருந்து யானை, திருமுறை ஏடுகள், மற்றும் வேண்டிய குடை, கொடி, ஆலவட்டம் முதலிய பொருள்கள் யாவும் கொடுத்துதவப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் ஆசியுரையும் அர்ச்சிட்டு வழங்கப்பெற்றது.

தருமையில் குடியரசுவிழா

சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டிலும் 26—1—51 வெள்ளிக்கிழமை அன்று விழா கொண்டாடப்பெற்றது. ஆதீனக் கல்விநிலையங்களாகிய பல்கலைக்கல்லூரி, தேவாரபாடசாலை, சிவாகம பாடசாலை, குருஞானசம்பந்தர் ஆரம்பப் பாடசாலை மாணவ மாணவிகள், காலை தேசியப்பாடல்களைப் பாடிக்கொண்டு வீதிவலம்வந்தார்கள். மடாலய முகப்பில் ஆரம்பப் பாடசாலை மாணவிகள் கோலாட்டம், கும்மி, நடனம் உள்ளிட்ட பலவகையில் விளையாட்டுக்கள் நிகழ்த்தினார்கள். மாணவர்கள் அனைவர்க்கும் மிட்டாய் வழங்கப்பெற்றது. கல்வி நிலையங்களிலும் ஆதீனக் கூட்டுறவுப் பண்டகசாலையிலும் மூவர்ணக் கொடி ஏற்றுவிக்கப்பெற்றன.

சிலோன் அன்பர்களுக்கு

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கவேண்டும் என்று ஒருபெருநோக்குடன் மிகக்குறைந்த சந்தாத்தொகையில் "ஞானசம்பந்தம்" வெளிவந்துகொண்டிருப்பது அன்பர்கள் அறிந்ததே. ஆயினும் இந்தியாவுக்குப் பணம் அனுப்பிப்பெறமுடியாமலிருக்கும் சட்டதிட்டங்காரணமாகச் சிலர் வி. பி. யில் அனுப்புமாறு கடிதம் எழுதுகின்றனர். அக்கடிதம் கண்டு அனுப்பப்பெறும் வி. பி. யில் சில அவர்களால் திருப்பிவிடப்படுகின்றது. திருக்குறள் வெளியீடும் அப்படியே. அவ்வாறின்றி அவர்கள் உடனே பெற்றுக்கொள்வார்களானல் ஞானசம்பந்தத்தின் வளர்ச்சிக்கு அது துணைசெய்யுமல்லவா?

நெல்லையில் தமிழ்த்திருநாள்

திருநெல்வேலி தருமபுர மடத்தில், தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத்தின் சார்பில் 4—2—51 முதல் 9—2—51 முடிய தமிழ்த் திருநாள் கொண்டாடப்பெற்றது. திரு. சு. மகாராசன் அவர்கள் B. SC., B. L., விழாவைத் தொடக்கிவைத்தார்கள். செய்யுள், திருமுறை, பத்துப்பாட்டு, மெய்கண்டமுறை, உலக அறிவு, மன்றும் அரங்கும் என்ற தலைப்பில் முறையே அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்கள். கவியரங்கு, கல்வித்திரை, உரையாடல், ஒலிநாடகம், பாராளுமன்றம் முதலியனவும் இந்நிகழ்ச்சியின் அங்கங்களாக அமைந்திருந்தன. குறித்தநேரத்தில் குறித்த நிகழ்ச்சிகள் தொடங்கி நிறைவுற்றன. ஆண்டுக்கொருமுறை இதுபோல் புலவர்களை ஒருங்குசேர்த்து அனைவரையும் தமிழ்பருகச் செய்வது உலகுபாராட்டுத்தகையது. அடுத்த ஆண்டும் அன்பர்களுக்கு இத்தகைய விருந்து கிடைக்கலாம். இன்பத்தமிழ் என்றும் வாழ்க!

மயிலத்தில் தமிழ்க்கழக ஆண்டுவிழா

மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் முருகன் செந்தமிழ்க் கழகத்தின் 14ம் ஆண்டு விழா 4—2—51 ல் யோகி ஸ்ரீ சுந்தானந்தபாரதியார் அவர்கள் தலைமையில் நடந்தது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கள் "சிலப்பதிகார உரை பெறு கட்டுரை" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram) 9—2—1951.